RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI DAILY TAMIL தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை PUBLISHED FROM - CHENNAI

08.08.2026 (சனிக்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 8 ஓசை 139

Facebook/dailymadras@gmail.com dailymardras@gmail.com

5 அமராவதியில் ரூ.1,002 கோடியில் குவாண்டம் மையம் ஆந்திர மாநில அமைச்சரவை ஒப்புதல்



6 ஹார்முஸ் ஜலசந்தி ஒப்பந்தம் இறுதிக்கட்டம் அதிபர் டிரம்பை தொடர்ந்து ஈரானும் அறிவிப்பு



8 "எங்களை நோக்கி எழும் கேள்விகளுக்கு ஆக.15-ல் பதிலடி கொடுப்போம்" - பயிற்சியாளர் கவுதம் கம்பீர்



கருணாநிதியின் 8–ஆம் ஆண்டு நினைவு தினம்

## மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.வினர் அமைதிப் பேரணி

### நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை

சென்னை, ஆக. 8 முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 8–ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது. அதையொட்டி சென்னையில் மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.வினர் அமைதிப் பேரணி நடத்தினார்கள். பின்னர் மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதியின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கடந்த 1924–ஆம் ஆண்டு ஜூன் 3–ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் பிறந்தார்.

அவர் தி.மு.க. வின் தலைவராக சுமார் 50 ஆண்டு காலம் பொறுப்பு வகித்தார்.

1957 முதல் 2018 வரை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர், 40 ஆண்டுகள் தி.மு.க. தலைவர், 5 முறை தமிழகத்தின் முதலமைச்சர் என்று அசைக்க முடியாத ஆட்சிபுரிந்தவர். அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து தமிழக வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஆளுமையாக விளங்கிய அவர் 2018–ஆம் ஆண்டு ஆகஸ்டு 7–ஆம் தேதி மரணமடைந்தார்.

அவரது நினைவு நாளை ஆண்டுதோறும் தி.மு.க.வினர் கடைபிடித்து வருகின்றர்.

இந்நிலையில் இன்று கருணாநிதியின் 8–ஆவது நினைவு நாள் கடைபிடிக்கப்பட்டது. அதையொட்டி தி.மு.க. சார்பில் சென்னையில் இன்று அமைதிப் பேரணி நடைபெற்றது.

இன்றுகாலை 8 மணிக்கு சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலை அருகில் இருந்து இந்த அமைதிப் பேரணி புறப்பட்டது.

இந்தப் பேரணிக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

ஓமந்தூரார் வளாகத்தில் இருந்து புறப்பட்ட இந்தப் பேரணி மெரினா கடற்கரையில் காமராஜர் சாலையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தை அடைந்தது. அங்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி எம்.பி., உள்ளிட்டோர் அவரது நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செய்தனர்.

மேலும் துணைப் பொதுச் செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் மாவட்டச் செயலாளர்கள், தலைமைச் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தி.மு.க.வின் பல அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

8–ஆவது நினைவு நாளான இன்று சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதியின் நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

எஸ்.சி.,எஸ்.டி. பிரிவினருக்கு

## 'கிரிமீலேயர்' கொள்கையை அமல்படுத்த முடியாது

### உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, ஆக. 8– எஸ்.சி., எஸ்.டி. சமூக பிரிவுகளில் பொருளாதாரத்தில் முன்னேறியவர்களை 'கிரீமி லேயர்' என வகைப்படுத்தி இடஒதுக்கீடு பலனில் இருந்து நீக்கக்கோரிய மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

இட ஒதுக்கீட்டுக்கான பலன்கள் ஏழை மக்களைச் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில், கொள்கைகளை வகுக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், பட்டியலின, பழங்குடியின வகுப்பில் (எஸ்.சி., எஸ்.டி.) உள்ள பொருளாதாரத்தில் முன்னேறியவர்கள், இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பலன்களைப் பெற்றுவிடுகின்றனர். ஆனால், அதே சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் இடஒதுக்கீட்டின் பலனை பெறாமல் உள்ளனர். இது இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைக்கிறது.

எனவே, பொருளாதாரத்தில் முன்னேறியவர்களை இடஒதுக்கீடு பலனில் இருந்து நீக்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கானது உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்தது. இந்தநிலையில் இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ள மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டில் வருமானம் அடிப்படையில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை எதிர்ப்பதாக தெரிவித்துள்ளது.

'கிரீமிலேயர்' விலக்கு என்பது பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்குப் பொருந்தாது என்றும், அரசியல் சாசனத்தின் பிரிவுகள் 341 மற்றும் 342–ன் கீழ் பட்டியல் சாதியினர், பழங்குடியினரை வகைப்படுத்த நாடாளுமன்றத்தால் மட்டுமே முடியும் எனவும் நீதிமன்றங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்றும் மனுவைதள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவிலேயே

## 94 ரபேல் போர் விமானங்களை தயாரிக்க பிரான்ஸ் அனுமதி

### ரூ.3.25 லட்சம் கோடியில் ஒப்பந்தம்

புதுடெல்லி, ஆக.8 இந்தியாவிலேயே 94 ரபேல் போர் விமானங்களை தயாரிக்க பிரான்ஸ் அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக ரூ.3.25 லட்சம் கோடியில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்திய ராணுவம் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. அடுத்தடுத்து ஏவுகணைகள் சேர்க்கப்பட்டு வருகின்றன. புதிய ஏவுகணைகளின் சோதனைகளும் நடந்து வருகின்றன. டிரோன்களும் புதிதாக வாங்கப்படுகின்றன.

அதே நேரத்தில் விமானப்படையும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆபரேசன் சிந்தூர் சமயத்தில் ரபேல் போர் விமானங்கள் சிறப்பாக செயல்பட்டதாக கூறப்பட்டது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டசால்ட் என்ற நிறுவனம் ரபேல் போர் விமானங்களை தயாரித்து வருகின்றது. இந்த விமானங்கள் பல வகையிலும் சிறந்தது என்று கூறப்படுகிறது. இவ்வகை விமானங்களை இந்தியா ஏற்கனவே வாங்கியுள்ளது. இவற்றை அதிக அளவில் வாங்க முடிவு செய்யப்பட்டது. பிரதமர் மோடி சில மாதங்களுக்கு முன்னர் பிரான்சுக்கு சென்றிருந்தபோது அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்தது. மொத்தம் 176 ரபேல் போர் விமானங்களை வாங்க தீர்மானிக்கப்பட்டது. அதில் முதல் கட்டமாக 114 விமானங்கள் வாங்கப்பட உள்ளன. இதற்காக ரூ.3.25 லட்சம் கோடி செலவில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 94 விமானங்களை இந்தியாவிலேயே தயாரிக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக தொழில்நுட்ப உதவிகளை பிரான்ஸ் நாடு வழங்கும்.

## பிரதமர் மோடியுடன் நெதன்யாகு தொலைபேசியில் ஆலோசனை

புதுடெல்லி,ஆக.8– பிரதமர் நரேந்திர மோடியை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு முக்கிய ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த உரையாடலின் போது, இந்தியா – இஸ்ரேல் இடையிலான முக்கிய கூட்டாண்மையை ஆய்வு செய்த இரு தலைவர்களும், பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்த உறுதியேற்றனர். மேற்கு ஆசிய போர் சூழல் குறித்துப் பேசிய இரு தலைவர்களும், தொடர்ந்து தொடர்பில் இருப்பது என முடிவு செய்தனர்.

கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது நடத்திய தாக்குதல்களுடன் தொடங்கிய இந்தப் போர், ஐந்து மாதங்களுக்கும் மேலாகத் தீர்வின்றி நீடித்து வருகிறது.

ஒடிசா ஏவுதளத்தில் மீண்டும் ஒரு சாதனை

## அக்னி– 4 ஏவுகணை சோதனை வெற்றி

### பாதுகாப்பு அமைச்சகம் தகவல்

புதுடெல்லி, ஆக 8: அக்னி4 பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையை இந்தியா நேற்று வெற்றிகரமாக மேற்கொண்டது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ஒடிஸாவின் சந்திப்பூர் மாவட்டத்தில் உள்ள ஏவுதளத்தில் அக்னி4 நடுத்தர பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து செயல்பாட்டு மற்றும் தொழில்நுட்பச் சோதனைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை இந்த ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்தது. இந்தியாவின் உத்திசார் ஏவுகணை தயாரிப்புத் திட்டத்தின் கீழ், அக்னி ரக ஏவுகணைகளின் வரிசையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (டிஆர்டிஓ) உருவாக்கப்பட்ட அக்னி4 ஏவுகணை, 4000 கி.மீ. வரை பாய்ந்து தரையில் இருந்து தரையில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டதாகும். இது அணுகுண்டுகள் உட்பட 1000 கிலோ வரையிலான வெடிகுண்டுகளைச் சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை பெற்றது. சாலைகள் மட்டுமல்லாது, கடினமான நிலப்பரப்புகளில் இருந்தபடியும் இந்த ஏவுகணையைச் செலுத்த முடியும் என்பதால் இவை உத்தரீதியில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ராணுவத்தில் ஏற்கனவே இணைக்கப்பட்ட அக்னி4 ஏவுகணைகளின் செயல்திறன் மற்றும் தயார்நிலையை ஆய்வு செய்வதற்காக இது போன்ற சோதனைகள் அவ்வப்போது பரிசோதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் கல்லூரி விழாக்கள், அரசு விழாக்களில்

## தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

### ஆளுநர் ஆர்லேகருக்கு 21 தமிழக எம்.பி.க்கள் கடிதம்

புதுடெல்லி, ஆக 8: தமிழ்நாட்டில் ஆளுநர் பங்கேற்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு விழாக்களில் தொடர்ந்து மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுப் புறக்கணிக்கப்படும் 'தமிழ்த்தாய் வாழ்த்துக்கு' முன்னுரிமை வழங்கக் கோரி 'இண்டி' கூட்டணியைச் சேர்ந்த தமிழகத்தின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகருக்குக் கூட்டாகக் கடிதம் எழுதியுள்ளனர்.

இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் விருதுநகர் தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் மாணிக்கம் தாகூர் பேசுகையில், "தமிழ்த்தாய் வாழ்த்து நமது மாநிலப் பாடல் ஆகும்.

அதைத் தொடர்ச்சியாகப் புறக்கணிப்பதும், நிகழ்ச்சிகளின் போது மூன்றாவது இடத்துக்குத் தள்ளுவதும் மிகவும் தவறான நடைமுறையாகும். தமிழகத்தில் இதுபோன்ற செயல்களை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டாம் என்று ஆளுநருக்கு ஆகஸ்ட் 5 ஆம் தேதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளோம். இத்தகைய செயல்பாடு தமிழ்மொழிக்கும் தமிழ்பண்பாட்டுக்கும் இழைக்கப்படும் பெரும் அவமானமாகும். எனவே, தமிழ் மாநிலப் பாடலை அவமதிப்பதைக் கைவிடுமாறு 'இண்டி' கூட்டணியைச் சேர்ந்த 21 எம்.பி.க்கள் கையொப்பமிட்ட கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பியுள்ளோம்" என்றார்.

கடந்த ஜூலை 28 ஆம் தேதி திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 33 வது பட்டமளிப்பு விழாவில், ஆளுநர் மாளிகை உத்தரவின்படி முதலில் 'வந்தே மாதரம்', இரண்டாவதாக 'தேசிய கீதம்', மூன்றாவதாகவே 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக எம்.பி.க்கள் ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில், தமிழ்த்தாய் வாழ்த்தான 'நீராருங் கடலுடுத்த' பாடலை இயற்றிய மனோன்மணியம் சுந்தரனாரின் பெயரிலான பல்கலைக்கழகத்திலேயே, அந்தப் பாடலை மூன்றாவது இடத்துக்குத் தள்ளியது தமிழக மக்களுக்கும் அவருக்கும் நேர்ந்த மனவருத்தமாகும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

முன்னதாக, கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரில் தமிழக ஆளுநர் உரையாற்றிய போது, தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடப்பட்ட நல்லிணக்க நடைமுறையை எம்.பி.க்கள் தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். கர்நாடகம் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் அந்தந்த மாநிலப் பாடலை விழாவின் தொடக்கத்திலும், தேசிய கீதத்தை நிறைவிலும் பாடும் முறையே பின்பற்றப்படுகிறது.

இது தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்காது என்றும் அவர்கள் குறிப்பிட்டுஒள்ளனர்.

'இண்டி' கூட்டணியில் அங்கம் வகிக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம், பி. மாணிக்கம் தாகூர், வி. வைத்திலிங்கம், டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத், ஜோதிமணி, பி. கார்த்தி சிதம்பரம், விஜய் வசந்த், கே. கோபிநாத், பிரவீண் சக்கரவர்த்தி, சசிகாந்த் செந்தில், சி. ராபர்ட் புரூஸ், ஆர். சுதா, கிறிஸ்டோபர் மாணிக்கம் ஆகிய 13 காங்கிரஸ் எம்.பி.க்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் அதன் தலைவர் தொல். திருமாவளவன், டி. ரவிகுமார் ஆகிய இரு எம்.பி.க்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கே. சுப்பராயன், வி. செல்வராஜ் ஆகியோரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சு. வெங்கடேசன், ஆர். சச்சிதானந்தம் ஆகியோரும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் துரை வைகோவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் கே. நவாஸ்கனியும் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

தமிழக பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தையும், நிறைவில் தேசிய கீதத்தையும் பாடுவதை உறுதி செய்ய ஆளுநர் மாளிகை தெளிவான வழிகாட்டுதல்களைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் தமிழக எம்.பி.க்கள் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளனர்.



சென்னை விமான நிலைய வளாகத்தில் உள்ள

# சைபர் கிரைம் காவல் நிலையத்தை மாற்ற வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

**தாம்பரம்,ஆக.8**

சென்னைவிமானநிலையத்திற்கு வரும் பயணிகள், பயணிகளை வழியனுப்ப, வரவேற்க வருபவர்கள் வரும் வாகனங்களுக்கும், அதோடு விமான நிலையத்திற்கு அலுவல் காரணமாக, வந்து செல்லும் வாகனங்களுக்கு, டோல்கேடில், பார்க்கிங் கட்டணம் வசூலிப்பது நியாயமானது. ஆனால் விமான நிலையத்திற்கும், எங்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நாங்கள் சைபர் கிரைம் குற்ற வழக்குகள் சம்பந்தமாக, புகார் கொடுப்பதற்கு, சைபர் கிரைம் பிராஞ்ச் காவல் நிலையத்திற்கு வந்து செல்கிறோம். எங்களிடம் விமான நிலையத்திற்கு வரும் வாகனங்களுக்கு, வசூலிப்பது போல், பார்க்கிங் கட்டணங்கள் வசூலிப்பது, எந்த விதத்தில் நியாயமானது? என்று சைபர் கிரைம் பிராஞ்ச் காவல் நிலையத்துக்கு வந்து செல்லும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள் கடும் வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர். இதைப் போன்ற வாக்குவாதங்கள், விமான நிலைய டோல்கேட் பகுதியில், தினமும் நடந்து வருகிறது. அது மட்டும் இன்றி, விமான நிலைய வளாகத்திற்குள், சிகரெட்டுகள் விற்பனை செய்யும் கடைகள் கூட இருக்கின்றன. ஆனால் ஜெராக்ஸ் பிரிண்ட் எடுக்கும் கடை, ஒன்று கூட இல்லை. இதனால் சைபர் கிரைம் பிராஞ்ச் காவல் நிலையத்திற்கு வருபவர்கள், போலீசார் கேட்கும் ஆவணங்கள், சான்றிதழ்கள் ஜெராக்ஸ் நகல்கள் எடுப்பதற்கு, பல்லாவரம் அல்லது மீனம்பாக்கம், ஆலந்தூர் போன்ற பகுதிகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்போது புகார்தாரர்கள், வாகனங்களை எடுத்துக் கொண்டு வெளியே சென்று விட்டு, மீண்டும் திரும்பி வரும்போது, அவர்கள் இரு முறை பார்க்கிங் கட்டணங்கள் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது சைபர் கிரைம் பிராஞ்ச் காவல் நிலையத்திற்கு, புகார் கொடுக்க வருபவர்கள், வழக்கு விசாரணைகள் சம்பந்தமாக வருபவர்கள், போன்றவர்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

எனவே இந்த காவல் நிலையத்தை, ஏற்கனவே இருந்தது போல் கிண்டி காவல் நிலைய வளாகம் அல்லது பரங்கிமலையில் உள்ள தென் சென்னை காவல்இணை ஆணையர் அலுவலகத்திற்கு மாற்றினால், பெரும் வசதியாக இருக்கும் என பாதிக்கப்பட்ட பொது மக்கள் பலரும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போடி அருகே

# தொழிலாளி கொலையில் நண்பர்கள் 2 பேர் கைது

**போடி, ஆக. 8**

தேனி மாவட்டம் போடி அருகே சிலமலை பாவுகல் தெருவைச் சேர்ந்தவர் கருப்பையா மகன் ஜெயக்குமார் (27). கூலித் தொழிலாளி. இவர் செவ்வாய்க்கிழமை (ஆக. 4) இரவு நண்பர்கள் அழைப்பதாக வீட்டிலிருந்து சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரது தந்தை இறந்து விட்ட நிலையில் தாயார் ராணி (50) உறவினர்களிடம் விசாரித்துள்ளார். அப்போது செவ்வாய்க்கிழமை இரவு போடி அருகே சில்லமரத்துப்பட்டி நூலகம் அருகே ஜெயக்குமாருடன் இரண்டு பேர் தகராறு செய்து கொண்டிருந்ததாக தகவல் கிடைத்தது. உறவினர்கள் இப்பகுதியில் விசாரித்ததில் சில்லம ரத்துப்பட்டியிலிருந்து பெருமாள்கவுண்டன்பட்டி செல்லும் சாலையில் தனியார் தோட்ட கிணற்று மேட்டில் ஜெயக்குமாரின் உடைகள், செருப்பு ஆகியவை இருந்துள்ளது. இது குறித்து போடி ஊரகக் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு துறையினர் உதவியுடன் கிணற்றில் தேடியதில் புதன்கிழமை ஜெயக்குமாரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. அவரது உடலில் காயங்கள் இருந்ததும் தெரியவந்தது. இதனையடுத்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். விசாரணை குறித்து போலீஸார் தரப்பில் தெரிவித்தது. ஜெயக்குமாரும், சின்னமனூரிலிருந்து வந்து சில்லமரத்துப்பட்டியில் வசிக்கும் விக்னேஷ்குமார் (29), போடி நகரில் வசிக்கும் ஹரிபிரசாத் (23) ஆகியோரும் நண்பர்களாக பழகி வந்துள்ளனர். இதில் விக்னேஷ்குமாரின் இரு சக்கர வாகனத்தை ஜெயக்குமார் இரவல் வாங்கி ஓட்டிச் சென்றுள்ளார். மது போதையில் ஓட்டியதால் போலீஸாரிடம்சிக்கினார். இதில் போலீஸார் அபராதம் விதித்தனர். ஜெயக்குமார் அபராதம் கட்டாததால் போலீஸார் இரு சக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர். இரு சக்கர வாகனத்தை மீட்டுத் தரும் படி விக்னேஷ்குமார் கூறி வந்துள்ளார். ஜெயக்குமார் மீட்டித் தராததால் விக்னேஷ்குமாரே பணத்தை கட்டி மீட்டியுள்ளார். அதற்கான பணத்தை கேட்டு விக்னேஷ்குமார் ஜெயக்குமாருடன் சண்டை போட்டுள்ளார். செவ்வாய்க்கிழமை இரவு விக்னேஷ்குமாரும், ஹரிபிரசாத்தும் ஜெயக்குமாரை தாக்கியுள்ளனர். பின்னர் இரு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று ஜெயக்குமார் கொலை செய்யப்பட்டு கிடந்த தனியார் தோட்ட கிணறு பகுதியிலும் வைத்து தாக்கியுள்ளனர். ஜெயக்குமார் மயங்கிய நிலையில் கிணற்றில் தளளிவிட்டு தப்பிவிட்டனர். இதனையடுத்து போலீஸார் வியாழக்கிழமை விக்னேஷ்குமாரையும், ஹரிபிரசாத்தையும் கைது செய்தனர்.

பழனி கோவில் ரூ.100 கோடி நிலமோசடி வழக்கு

# கைதான சார்பதிவாளருக்கு திடீர் நெஞ்சு வலி

## மருத்துவமனையில் அனுமதி



**திண்டுக்கல், ஆக.8–**

பழனி அடிவாரம் சந்நிதி வீதியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் மடத்தின் நில மோசடி தொடர்பாக, பழனி கோயில் நிலங்கள் பிரிவு கண்காணிப்பாளர் ச.முருகானந்தம் அளித்த புகாரின் பேரில், சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் மற்றும் போலி அறக்கட்டளை பிரமுகர் முருகதாஸ் உள்ளிட்ட 4 பேர் மீது பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தமிழக அரசின் உத்தரவைத் தொடர்ந்து, கடந்த 15.07.2026 அன்று இவ்வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டது. சிபிசிஐடி போலீசார் கடந்த 17 தினங்களாக திண்டுக்கல் பழனி ஆகிய இடங்களில் விசாரணை மேற்கொண்டனர்.

இவ்வழக்கு தொடர்பாக அறக்கட்டளையை சேர்ந்த முருகதாஸ் நிலத்தை விலைக்கு வாங்கிய மடத்துக்குளத்தைச் சேர்ந்த வெள்ளத்துரை பழனிபுதூரைச் சேர்ந்த சேதுபதி இவர்களுக்கு உடந்தையாக செயல்பட்ட வழக்கறிஞர் அன்வர்தீன் ஆகியோர் 29.07.26 அன்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் கடந்த 6 நாட்களாக சிபிசிஐடி அலுவலகத்தில் சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் ஆஜரானார். இந்த நிலையில் நேற்று ஜஸ்டின் மணிகண்டன் மற்றும் பத்திர எழுத்தாளர் ஜெயபிரகாஷ் ஆகிய இருவரின் முன்ஜாமீன் மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ராஜசேகர், இருவரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இதனையடுத்து இன்று திண்டுக்கல் சிபிசிஐடி போலீசார் சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டனை கொடைக்கானலில் பதுங்கி இருந்த நிலையில் அவரை கைது செய்து திண்டுக்கல் சிபிசிஐடி அலுவலகத்திற்கு அழைத்து வந்தனர். இதற்கிடையே நேற்று கைது செய்யப்பட்ட ஜஸ்டின் மணிகண்டனை திண்டுக்கல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க சிபிசிஐடி போலீசார் திட்டமிட்டிருந்தனர். அப்போது திடீரென தனக்கு நெஞ்சு வலிப்பதாகவும், மூச்சு திணறல் ஏற்பட்டதாகவும், ஜஸ்டின் மணிகண்டன் கூறியிருக்கிறார். இதை அடுத்து அவரை திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போலீசார் மருத்துவ பரிசோதனை செய்தனர். அப்போது அவருக்கு ரத்த அழுத்தம் அதிகரித்து இருப்பதாக கூறியதால் அந்த மருத்துவமனையிலேயே சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். சிகிச்சைக்கு பிறகு இன்று ஜஸ்டின் மணிகண்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்கப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

கழிவு நீர் செல்வதில் தகராறு

# வாலிபர் கத்தியால் குத்திக்கொலை

## கல்லூரி மாணவர் கைது

**சிவகாசி,ஆக.8–**



உயிரிழந்த செந்தில்முருகன்

சிவகாசி அருகேயுள்ள மேலப்பெத்தலுபட்டி கிராமத்தைச் சேர்ந்த காவலாளி சக்கையா என்பவரது மகன் செந்தில் முருகன்( வயது 32 ) இவர் சென்னையில் ஸ்வீட் கடையில் வேலை பார்த்து வந்தார். விடுமுறையில் கிராமத்திற்கு செந்தில் முருகன் வந்திருந்தார். இவரது வீட்டிற்கும், பக்கத்து வீட்டில் குடியிருக்கும் செந்தில் முருகனின் உறவினர் சுமை தூக்கும் தொழிலாளி சுந்தரமூர்த்தி என்பவரின் வீட்டிற்கும், இருவரது வீடுகளின் அருகே கழிவுநீர் செல்வதில் ஏற்கனவே பிரச்சனையிருந்து வந்ததாகத் தெரிகிறது.

தற்போது மீண்டும் அந்தப் பிரச்சனை தலையெடுத்து முற்றவே ஆத்திரமடைந்த சுந்தரமூர்த்தியின் மகன் கனகவேஸ்வரன்( வயது 17). செந்தில் முருகனை நெஞ்சில் கத்தியால் குத்தியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்த போலீசார்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று செந்தில் முருகனின் பிரேதத்தைக் கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கன கேஸ்வரனுக்கு உயிரிழந்த செந்தில் முருகன் மாமா உறவு முறை யாயிருந்த நிலையில், கனகேஸ்வரன் சிவகாசியிலிருந்து சாத்தூர் செல்லும் சாலை சின்னக்காமன் பட்டி அரசு கல்லூரியில் முதலாமாண்டு கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

திருமணமாகாத இளைஞர் செந்தில் முருகன் கொலையான சம்பவம் குறித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ள சிவகாசி கிழக்குப் பகுதி போலீசார் கல்லூரி மாணவர் கனகவேஸ்வரனை கைது செய்து பல்வேறு கோணங்களில் மேல் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராஜபாளையத்தில்

# மனைவி மீது கோபத்தால் குழந்தையை தாக்கிய தந்தை கைது

**ராஜபாளையம், ஆக.8**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த கந்தசாமி மகன் அரவிந்தசாமி (32) டிரைவர். இவர் சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறார்.

காதல் திருமணம் செய்த இவருக்கு 7 வயதில் பிரனேஷ், 4 வயதில் அபினேஷ் என இரண்டு குழந்தைகள் உள்ளனர். தொழிலுக்குச் சென்று விட்டு இரவு வீட்டிற்கு வரும் போது குடித்துவிட்டு வருவதை வழக்கமாக கொண்டுள்ளார். இதனால் குடும்பத்தில் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் வழக்கம் போல் இரவு மது போதையில் வீட்டிற்கு வந்தவர் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது மனைவி கோபித்துக்கொண்டு இளைய மகனை தூக்கிக் கொண்டு வீட்டிலிருந்து வெளியேறிவுள்ளார். மூத்த மகன் பிரனேஷ் தூக்கிக்கொண்டு இருந்தவனை மனைவி மீது கொண்ட ஆத்திரத்தில் குழந்தையை தூக்கி கீழே போட்டு, முகத்தில் கையால் தாக்கிவுள்ளார். குழந்தையின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கம் இருந்தவர்கள் ஓடிவந்து குழந்தையை மீட்டுள்ளனர்.

பலத்த காயமடைந்த பிரனேஷ் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்த புகாரின் பேரில் வடக்கு காவல் நிலைய காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து அரவிந்தசாமியை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

போலி நம்பர் பிளேட் பொருத்திய காரில்

# குட்கா கடத்தல்,ராஜஸ்தானை சேர்ந்த 2 பேர் கைது, 360 கிலோ குட்கா ,கார் பறிமுதல்

## டி.எஸ்.பி., தனிப்படையினர் அதிரடி நடவடிக்கை

**மேலூர், ஆக. 8–**



சேலம்,திருச்சி மார்க்கமாக மதுரைக்கு காரில் குட்கா, உள்ளிட்ட போதைப் பொருட்கள் கடத்தல் நடைபெறுவதாக கிடைத்த தகவலையடுத்து,

தனிப்படையினர் மற்றும் மேலூர் உட்கோட்ட டிஎஸ்பி , ஆய்வாளர், தனிப்பிரிவு, குற்றத் தடுப்பு பிரிவு மற்றும் போலீசார் களத்தில் இறங்கி தீவிர கண்காணிப்பு மற்றும் சேலம், திருச்சி, மதுரை வரையிலான பல்வேறு சுங்கச்சாவடி மையங்களில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை தீவிரமாக ஆய்வு செய்து வந்தனர்,இந்த நிலையில் நேற்று அதிகாலை நேரம் மதுரைதிருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் உள்ளசுங்கச்சாவடிகளில் கேமராக்களை ஆய்வு செய்து கொண்டிருந்த போது சந்தேகத்திற்கு இடமாக வெளிமாநிலத்தை சேர்ந்த இரண்டு வாலிபர்கள்தமிழக அரசு பதிவு எண் கொண்ட ஒரு சொகுசு காரில் அந்த இடத்தை அசுர வேகத்தில் கடந்தனர்,மேலும் போலீசார் நிற்பதை கண்டவுடன் மின்னல் வேகத்தில் பறந்தனர்,

உடனடியாக தனிப்படை மற்றும் டிஎஸ்பி உள்ளிட்டோர் அந்த சொகுசு காரை விரட்டி சென்றனர், மேலூர் நான்கு வழிசாலை பிரிவான நாவினிப்பட்டி பாலம் இடத்தில் வைத்து அந்த காரை மடக்கினர்,

ஓடி தப்ப முயன்ற காரில் இருந்த இரண்டு பேர்களையும் கைது செய்து காருடன்

மேலூர் காவல் நிலையம் கொண்டு வந்தனர்,

வெளிமாநில பதிவு எண்ணை எடுத்து விட்டு தமிழக பதிவு எண் கொண்ட பிளேட் பொருத்தப்பட்டது தெரிய வந்தது, மேலும் காரில் 360 கிலோ எடையுள்ள குட்கா,போதைப் பொருள் இருப்பதும் தெரிய வந்தது, குட்கா, சொகுசு கார்,மூன்று விலையுயர்ந்த செல்போன் ஆகிய வற்றை பறிமுதல் செய்தனர்,

அந்த இரண்டு பேர்களையும் கைது செய்தனர் விசாரணையில் ராஜஸ்தான் மாநிலம்,ஜலோரீ மாவட்டம், ஹாஞ்சிகா வாஷ், தீபாவாஷ் பகுதியை சேர்ந்ததிலீப்குமார் (28)அதே மாவட்டம் சாவ்கோ ஹாலி ஷரலி பகுதியை சேர்ந்த நீலேஷ் சிங் ராஜ் புரோஹித் (23) என்பதும், இவர்கள் ராஜஸ்தான் பகுதியில் இருந்து வந்து பெங்களூரில் குட்கா போதைப் பொருட்களை வாங்கி கொண்டு தமிழக எல்லை வந்ததும் காரில் தமிழக பதிவு எண் கொண்ட பிளேட்டை பொருத்தி கொண்டு கடத்தியதும்,தெரிய வந்தது, மேலும் சில தினங்களுக்கு முன்பு இதே தனிப்படை மற்றும்டிஎஸ்பிசிவக்குமார், கொட்டாம்பட்டி போலீசார் உள்ளிட்டோர் இணைந்து நான்கு வழிச்சாலையில் வாகன தனிக்கை யில் ஈடுபட்டு குட்கா கடத்தி வந்த கார் ஆகியவற்றை பறிமுதல் செய்து ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த வர்களை கைது செய்துசிறையில்அடைத்தனர், அதில் ஒருவர் தற்போது சிக்கி உள்ளவரது உடன் பிறந்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும், காவல் துறைக்கு சவால் விடும் வகையில் சந்தேகப்படாத வகையில் சொகுசு காரில்தமிழக பதிவு எண்ணுடன் துணிச்சலாக இந்த குட்கா கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தர்களை, திருச்சி,சேலம் என சுங்கச் சாவடி மையங்களில் தீவிர ஆய்வு மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு கைது நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மாவட்ட போதைத்தடுப்பு தனிப்படை, மற்றும் உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் ஆய்வாளர், மற்றும் தனிப்பிரிவு, குற்றத்தடுப்பு போலீசாருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தேவநாதன்பாராட்டு தெரிவித்துள்ளார். கடத்தி வரப்பட்ட போதைப்பொருட்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறது, மற்றும் விற்பனை செய்யப்பட்டு வந்த விபரங்கள் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

மெட்ராஸ் மணி
MADRAS MANI · DAILY TAMIL · PUBLISHED FROM - CHENNAI
ஆக 08 2026 சனிக்கிழமை

# ‘‘குறுவையில் தண்ணீர் இன்றி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்’’ - இபிஎஸ் கோரிக்கை

**சென்னை:**

‘‘இந்த ஆண்டு ஆழ்துளைகிணறு பாசனத்தை நம்பி 2 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டது. அதில் ஒரு லட்சம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் வறண்டு பாதிக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு சேதமடைந்த பயிர்களுக்கு, உரிய அதிகாரிகளை அனுப்பி கணக்கிட்டு நிவாரணம் வழங்க வேண்டும்’’ என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை வைத்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று பேசிய அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ‘‘காவிரி நதிநீர் பிரச்சினை மற்றும் தண்ணீர் இன்றி குறுவை பயிர்கள் காய்ந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து இரு சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டுவந்துள்ளோம். அதிமுக மட்டுமல்லாது அனைத்துக் கட்சி தலைவர்களும், கர்நாடக அரசு போல தமிழகத்திலும் அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தை கூட்டி கருத்து கேட்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகிறோம்.

இதற்கு முன்பு அதிமுக, திமுக அரசுகள் இருக்கும் போது, காவிரி பிரச்சினையில் அனைத்துக்கட்சிகள் மற்றும் விவசாய அமைப்புகளை அழைத்து கருத்துக்களை கேட்டு, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பது என்பதே நடைமுறையாக உள்ளது. ஒவ்வொரு முறையும் கர்நாடகாவிடம் போராடி, வாதாடி தண்ணீர் பெற வேண்டி உள்ளது. இந்த ஆண்டு கர்நாடக அணைகளில் போதிய தண்ணீர் இருந்தும், தண்ணீர் திறக்க மறுக்கப்பட்டது.

காவிரி மேலாண்மை ஆணையம் 3,500 கன அடி தண்ணீர் திறக்க உத்தரவிட்டும், கர்நாடகா தண்ணீர் திறக்கவில்லை. அவ்வாறு அவர்கள் தண்ணீர் திறந்திருந்தால் விவசாயிகள் குறுவை சாகுபடி செய்திருப்பார்கள். இப்போது கர்நாடக அணைகள் நிரம்பியதால் உபரி நீர் தான் வந்துகொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு ஆழ்துளை கிணறு பாசனத்தை நம்பி 2 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்தார்கள். அதில் ஒரு லட்சம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் வறண்டு பாதிக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு சேதமடைந்த பயிர்களுக்கு, உரிய அதிகாரிகளை அனுப்பி கணக்கிட்டு நிவாரணம் வழங்க வேண்டும்’’ என்றார்.

# பழனி முருகன் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

## தர்மபுரியை சேர்ந்த ஒருவர் கைது

**பழனி, ஆக.8–**

சென்னையில் உள்ள போலீஸ் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு நேற்று ஒரு நபர் செல்போனில் பேசினார். அதில் அவர் பழனி முருகன் மலைக் கோவில் அலுவலகம் மற்றும் ரயில் நிலையம் ஆகிய இடங்களில் வெடிகுண்டு வைத்துள்ளதாக மிரட்டல் விடுத்து தனது இணைப்பை துண்டித்து விட்டார். இதையொட்டி திண்டுக்கல் மாவட்ட வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார் பழனிக்கு விரைந்து வந்து. கோவில் பகுதியில் உள்ள அடிவாரம், கோவில் அலுவலகம், போன்ற இடங்களை மெட்டல் டிடெக்டர் கருவிக்கொண்டு தீவிரமாக சோதனை செய்தனர். பின்பு மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. அதன் பின்பு அது புரளி என்று தெரிய வந்தது.

இந்நிலையில் போலீஸ்சார் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரின் செல்போன் நம்பர் சிக்னலை கண்காணித்தனர். அதில் அவர் பழனி திண்டுக்கல் வழியாக ராமேஸ்வரம் செல்லும் அமிர்தா எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணிப்பது தெரிய வந்தது. உடனே அவரைப் போலீசார் பிடித்தனர். போலீஸ் விசாரணையில் அவர் தர்மபுரி மாவட்டம் நல்லாம்பள்ளி அருகே உள்ள பாளையம் புதூர் ராஜீவ்காந்தி நகரை சேர்ந்த முனியப்பன் வயது 28 என்று தெரியவந்தது. பிறகு அவரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இளையான்குடி

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் அருகே வேகத்தடை அமைக்க வேண்டும்

## பக்தர்கள் கோரிக்கை

**இளையான்குடி,ஆக.8–**

இளையான்குடியிலிருந்து சாத்தனி செல்லும்சாலையில் உள்ளது ஸ்ரீஅழகிய மீனாட்சி அம்மன்கோவில் சோதுகுடி கிராமத் திக்கு பாத்தியப்பட்ட பலஆண்டு கால இக்கோவிலில் தினம்தோறும் காலை அபிஷேகம் நடைபெறும். சுற்று வட்டார பக்தர்களும் கலந்து கொள்வார்கள்.

இக்கோவில் வளைவில் வேகத்தடை அமைக்க கோரிக்கைவிடுத்துள்ளனர். இதுகுறித்து இக்கோவில் கிராம நிர்வாகக்குழுவின் ஒருவரான திருநாகசுப்ரமணியம் அவர்கள்கூறுகையில் '''இக்கோவில் 300 ஆண்டுக்களுக்கு மேற்பட்டது. ஆரம்பத்தில் திறந்த வெளியில் சிறிய அறையில் இருந்தது. கடந்த நான்கு ஆண்டுக்கு முன்னாள் குடமுழக்கு நடைபெற்று ஆண்டுதோறும் விழா நடைபெற்று அன்னதானம்நடைபெற்று வருகிறது. பெரிய அளவில் உள்ள கோவிலில் சுற்றுப்புறசுவர் இல்லாமல் இருந்தது. அன்று இருந்த இரண்டு வேப்ப மர நிழலில் அவ்வழியே செல்லக்கூடிய பலர் கோவில் பிரகாரத்தில் ஓய்வெடுத்து செல்வதுண்டு. ஆனால் சில சமூக விரோதிகள் தவறாக அசுத்தம் செய்வதனால் குப்பைகலாகி விடுகிறது. இதனால் சுற்றுப்புற சுவர் எழுப்பப்பட்டது. சாலையின் மிக அருகில் இருப்பதால் வளைவில் எதிரே வரும் வாகனங்கள் தற்போது தெரிவதில்லை... இந்த சாலைவழியாக சூராணம், தேவகோட்டை, சேத்தூர், தொண்டி, போன்ற ஊர்களுக்கு அரசு பேருந்துகளும் இதர வாகனங்களும் செல்வதால் இந்த வளைவில் சாலையின் முன்னும், பின்னும், வேகத்தடை அமைக்க வேண்டும், எனக்கூறுகிறார்.

எனவே இது சம்மந்தப்பட்ட நெடுஞ்சாலை துறையினர் உடனடியாக வேகத்தடை அமைக்குமாறு பக்தர்களும், வாகன ஓட்டிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ராஜபாளையத்தில்

# தொழிலதிபர் வீட்டில் நகை, பணம் திருட்டு

ராஜபாளையம், ஆக.8

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் மாடசாமி கோவில் தெருவைச் சேர்ந்த பாஸ்கர் ராஜா மகன் விஷ்ணு (47) தொழிலதிபர். இவரது இல்லத்தில் ஒய்யம்புளி தெருவைச் சேர்ந்த மகேஸ்வரி (52) கடந்த இரண்டு ஆண்டுகளாக பணிப்பெண்ணாக இருந்து வந்தார். இந்நிலையில் பெட்ரூம்பில் வைக்கப்பட்டிருந்த பீரோவில் நகை, பட்டுப்புடவை, ரூ.5000 மற்றும் கை கடிகாரம் காணாமல் போய்வுள்ளது. இது குறித்து வடக்கு காவல் நிலையத்தில் விஷ்ணு புகார் அளித்தார். புகாரின் பேரில் காவல் துறையினர் விட்டிலிருந்த சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து விசாரித்து வந்தனர். விசாரணையில் மகேஸ்வரி நகை, பட்டுப்புடவையை திருடி அவரது மகளிடம் கொடுத்தது தெரியவந்தது. இதையடுத்து மகேஸ்வரியை கைது செய்து சிறையில் அடைத்தனர். இவ்வழக்கு தொடர்பாக மகேஸ்வரியின் மகள் அமுதாவை காவல் துறையினர் தேடிவருகின்றனர்.

### வேடசந்தூர் அருகே

# பட்டப்பகலில் வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியிடம் நகை பறிப்பு

## கொள்ளையனை போலீசார் விரட்டி பிடித்தனர்



வேடசந்தூர், ஆக.8

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள பாகாநத்தம் புதூரை சேர்ந்த லவுகம்மாள் (வயது 75) இவரது கணவர் இறந்து விட்ட நிலையில் தனியாக வீட்டில் வசித்து வருகிறார்.

(வியாழக்கிழமை) மதியம் லவுகம்மாள் வீட்டில் தனியாக இருந்த போது மோட்டார் சைக்கிள் வந்த மர்ம ஆசாமி தண்ணீர் கேட்பது போல கேட்டு லவுகம்மாளின் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க சங்கிலியை பறித்துக் கொண்டு அங்கிருந்து மோட்டார் சைக்கிள் தப்பி சென்று விட்டார். கழுத்தில் காயம் அடைந்த லவுகம்மாள் அருகே உள்ள கொம்பேறிபட்டி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு எரியோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் வினோதா தலைமையில் உடனடியாக போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்திய போது மூதாட்டியிடம் நகையை பறித்து கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடியது குறித்து அறிந்து உடனடியாக போலீசார் ஜீப்பில் எரியோடு வேடசந்தூர் சாலையில்தண்ணீர்பந்தம் பட்டி அருகே மோட்டார் சைக்கிளில் சென்ற கொள்ளையனை சந்தேகத்தின் பேரில் தனிப்படை போலீசார் வழிமறித்து நிறுத்தி விசாரணை நடத்திய போது மூதாட்டியிடம் கொள்ளையடித்தது தெரிய வந்தது.

உடனடியாக பிடிபட்ட கொள்ளையனை எரியோடு போலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரித்த போது பிடிபட்ட கொள்ளையன் வேடசந்தூர் அருகே உள்ள ஜி.நடுப்பட்டியைச் சேர்ந்த பொன்ராஜ் (வயது 38) என்பது தெரிய வந்தது.

இதுகுறித்து எரியோடு போலீசார் வழக்கு பதிவு செய்து பொன்ராஜை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எரியோடு அருகே பட்டப்பகலில் வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியிடம் நகை கொள்ளை அடித்த சம்பவம் பெரும் பரபரப்பு படுத்தி உள்ளது.

### நிலக்கோட்டை அருகே

# ஆட்டோ கவிழ்ந்து டிரைவர் சாவு

## நாய் குறுக்கே வந்ததால் விபரீதம்

நிலக்கோட்டை, ஆக. 8

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா பள்ளபட்டியைச் சேர்ந்த யோகானந்த் மகன் ரமேஷ் கண்ணன் வயது 22. இவர் தற்போது ஆட்டோ டிரைவராக பள்ளபட்டியில் உள்ள ஸ்டாண்டில் பணி செய்து வருகிறார்.

இவர் கடந்த மாதம் 25 ஆம் தேதி மதுரை சாலையில் சிலுக்குவார் பட்டி அருகே உள்ள பழைய சிலுக்குவார் பட்டி பகுதியில் ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது திடீரென்று நாய் குறுக்கே வந்தது. நாயைக் காப்பாற்றுவதற்காக திடீரென்று பிரேக் போட்டுள்ளார்.

அப்போது ஆட்டோ கவிழ்ந்து ரமேஷ் கண்ணன் தலையில் பலத்த காயம் அடைந்தது. உடனடியாக நிலக்கோட்டையை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சிகிச்சையில் இருந்தவர் நேற்றுசிகிச்சைபலனின்றி பரிதாபமாக இறந்து போனார்.

இதுகுறித்து அவரது தாயார் சித்ரா தேவி நிலக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயபாண்டி இடம் கொடுத்த புகாரின் படி வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார். இறந்து போன ரமேஷ் கண்ணனுக்கு திருமணம் ஆகவில்லை.



தேசிய முற்போக்குதிராவிட கழகத்தின் சார்பில் பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரேமலதா விஜயகாந்த் வெளிநடப்பு செய்த காட்சி.

### மாற்றம் தருவோம் என்று சொன்னார்கள்

# தி.மு.க. அரசின் திட்டங்கள் பெயரை மாற்றி பட்ஜெட்டில் அறிவித்துள்ளனர்

## பிரேமலதா விஜயகாந்த் பேட்டி

சென்னை,ஆக.8–

தமிழக வேளாண் பட்ஜெட் குறித்து, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது:

வேளாண் சார்ந்த புதிய தொழிற்சாலைகள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அறிவிக்கவில்லை. இளைஞர்கள் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அறிவிப்பு இல்லை. மாற்றத்திற்கான, வித்தியாசமான பட்ஜெட் அறிவிப்பாக இல்லை.பல ஆண்டுகளாக அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்து திட்டங்களை அறிவித்து உள்ளனர். கெமிக்கல் இல்லாத ஆரோக்கியமான உணவு உற்பத்தியை கொண்டு வர வேண்டும். வேளாண் பட்ஜெட்டில் வாசிக்கப்பட்ட அனைத்தும் செயல்வடிவம்ஆனால்தான் ஏற்றுக்கொள்ள முடியும்.நெல் சேமிப்புக் கிடங்குகள் தொடர்பான அறிவிப்பு வேளாண் பட்ஜெட்டில் இல்லாததை கடுமையாக கண்டிக்கிறோம். நெல் மூட்டைகளை பாதுகாக்க எந்த திட்டமும் இல்லை.

மாற்றம் தருவோம் என்று சொன்னார்கள். முந்தைய திமுக அரசின்

திட்டங்களின் பெயரை மாற்றி பட்ஜெட்டில் அறிவித்துள்ளனர். செய்திதாளை வாசிப்பது போல வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வாசித்து இருக்கிறார். 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் தொடர்பாக பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் வெளியிடப்படவிலை. இவ்வாறு அவர் கூறினார்.

# 50 ஒருங்கிணைந்த வேளாண் எந்திர வாடகை வணிக மையம் அமைக்கப்படும்

## வேளாண்துறை அமைச்சர் தகவல்

சென்னை, ஆக.8

வேளாண்மை நடைபெறும் நிலத்துக்கு 100 சதவிகிதம் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் அமைச்சர் வினோத் கூறியுள்ளார்.தமிழக வேளாண் பட்ஜெட்டில் அவர் பேசியதாவது:ஒரு அரசு வல்லரசுஆகும்முன்விவசாயிகள் அரசாக மாற வேண்டும் என்பதே முதலமைச்சரின் கொள்கை. விவசாயிகள் வெற்றிபெற வேண்டும் என்ற முதலமைச்சரின் அறிவுரைக்கு ஏற்ப பல்வேறு இடங்களில் நானும் அமைச்சர்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்று உழவர்கள், உழவர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோரை அழைத்துப் பேசி அவர்களின் கோரிக்கைகளின் படி வேளாண் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் வகுத்துக் கொடுத்த சீரிய தொலைநோக்குத் திட்டங்களுடன் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கென ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த திட்டங்கள் தொடர்வதோடு,புதியதிட்டங்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன .

தொழில்களில் அதிக சவால்களை சந்திப்பது வேளாண் தொழில் தான். தொழிலாளர்கள் பற்றாக்குறை, உற்பத்தி செலவு உள்ளிட்ட சவால்களை எதிர்கொண்டாலும் உரிய விலை கிடைக்காத நிலையில் தொழிலையே கைவிடும் நிலை ஏற்படுகிறது

மாம்பழத்திற்கு கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் போதிய விலை கிடைக்கவில்லை. மத்திய அரசின் திட்டத்தின் கீழ் விலை வித்தியாச திட்டத்திற்குமுதல்முறையாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இத்தகைய நிகழ்வு களை விரைவாக எதிர்கொள்ள வேளாண் துறை தயாராக உள்ளது. இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள எல் நினோவால் தமிழகத்தில் 12 மாவட்டங்களில் அதிக தாக்கம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

“வேளாண்மை நடைபெறும் நிலம் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டம் முறையாக செயல்படுவதை உறுதி செய்திட தொடர்ச்சியான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினார். வேளாண்மை நடைபெறும் நிலம் 100 சதவிகிதம் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார்.

### தேசிய சிப்பிகள் தினத்தை முன்னிட்டு

# மாமல்லபுரம் அருங்காட்சியகத்தில் குவிந்த பயணிகள்-மாணவர்கள்

## முத்துச்சிப்பிகள் பற்றிய அறிவியல் தகவல்களை தெரிந்து கொண்டனர்

மாமல்லபுரம், ஆக.8

தேசிய சிப்பி தினத்தை முன்னிட்டு மாமல்லபுரம் சங்கு மியூசியத்தில் தனியாக அமைக்கப்பட்ட சிப்பிகள் அருங்காட்சியகத்தில் குவிந்த சுற்றுலா பயணிகள், பள்ளி சிறுவர்கள் அங்குள்ள விதவிதமான சிப்பிகள், முத்துக்களை பார்வையிட்டு ரசித்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் ஐந்துரதம் அருகில் சங்கு மியூசியத்தில் ஆசிய நாட்டு கடலில் சேகரிக்கப்பட்ட லட்சக்கணக்கில் சங்குகள் உள்ளன.இங்குசிப்பிக்குள் முத்து என அழைக்கப்படும் சிப்பிகள் அருங்காட்சியகமும் தனியாக உள்ளது. இந்து முத்துசிப்பி அருங்காட்சியகத்தின் நுழைவு வாயிலே சிப்பி வடிவில் அமைக்கப்பட்ட நுழைவு வாயிலாகும். இந்நிலையில் நேற்று தேசிய சிப்பி தினத்தை முன்னிட்டு சுற்றுலா வந்த பயணிகள், பள்ளி சிறுவர்கள் கண்ணாடி பேழைகளில் 1 அடி முதல் அரை அடி வரை உள்ளதும், சிறிய வகைகளை சேர்ந்தவை என, காட்சி படுத்தப்பட்ட விதவிதமான சிப்பிக ளையும், பல்வேறு வகை முத்துக்களையும் பார்த்து ரசித்தனர். அப்போது சங்கு, சிப்பி மியூசியத்தின் இயக்குனர் முகமது ரிஸ்வான், தேசிய சிப்பி தினத்தை முன்னிட்டு கையில் விதவிதமான சிப்பிகளை காண்பித்தபடி,சிப்பிக்குள் முத்துக்கள் எவ்வாறு உருவாகின்றன, சிப்பிகள் வளர வளர அதனை சுற்றியுள்ள ஓடுகளும் எப்படி வளருகிறது என்பது பற்றி கடலில் இருந்து சேகரிக்கப்பட்ட சிப்பிகளை காட்டி விளக்கினர். மேலும் ஆசிய கண்டத்தில் எந்தந்த நாட்டு கடலில் முத்து சிப்பி எடுக்கப்படுகிறதுஎன்பதுபற்றியும் அறிவியல் பூர்வமாக விளக்கி கூறினார். பிறகு சுற்றுலாபயணிகள், பள்ளி சிறுவர்கள் சிப்பி மியூசியத்தில் சுற்றி வந்து கண்ணாடி பேழையில் காட்சி அளித்த சிப்பிகள் முன்பு புகைப்படம் எடுத்து கொண்டனர். பிறகு சுற்றுலா வந்த பயணிகளுக்கு சிப்பி மியூசியத்தின் சார்பில் சிறிய சிப்பிகள், சங்குகள் பரிசளிக்கப்பட்டன.

### தமிழகம் முழுவதும்

# 10 கலைக்கல்லூரி முதல்வர்கள் இடமாற்றம்

## உயர்கல்வித் துறை உத்தரவு

சென்னை, ஆக 8:

சென்னை ராணி மேரி கல்லூரி, பாரதி அரசு கல்லூரி உள்ளிட்ட பத்து முதல்நிலை அரசு கலைக் கல்லூரிகளின் முதல்வர்களை உயர்கல்வித்துறை கல்லூரிக் கல்வி இயக்குநரகம் இடமாற்றம் செய்துள்ளது.

இதுதொடர்பாக கல்லூரிக் கல்வி ஆணையர் பா.பொன்னையா வெளியிட்டுள்ள பணியிட மாறுதல் உத்தரவு விவரம்:

ஜி. உமா மகேஸ்வரி: சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநரக இணை இயக்குநர் (நிதி) பொறுப்பில் இருந்து சென்னை ராணி மேரி கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

எஸ். கீதா: கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வரில் இருந்து தருமபுரி கல்லூரிக் கல்வி இயக்குநரக மண்டல இணை இயக்குநராக மாற்றப்பட்டுள்ளார்.

என். கலைவாணி: செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் இருந்து சென்னை ராணி மேரி கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

வி. பாண்டிமாதேவி: மேலூர் அரசு கலைக் கல்லூரியில் இருந்து மதுரை ஸ்ரீமீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

அ. மாதவி: நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வரில் இருந்து விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

எஸ். சித்ரா: அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் இருந்து சென்னை பாரதி மகளிர் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

ஜே. எபனேசர்: குடியாத்தம் அரசு திருமகள் மில்ஸ் கல்லூரியில் இருந்து உதகமண்டலம் அரசு கலைக் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

பி. வசந்தி: காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் இருந்து சேலம் அரசு கலைக் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

பி. சீனுவாச குமரன்: ராமநாதபுரம் சேதுபதி கலைக் கல்லூரியில் இருந்து குடியாத்தம் அரசு திருமகள் மில்ஸ் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

எஸ். அந்தோணி டேவிட் நாதன்: சிவகங்கை ராஜா துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியில் இருந்து செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வராக மாற்றப்பட்டுள்ளார்.

BAJAJ FINANCE

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:** பஜாஜ் ஆட்டோ லிமிடெட் வளாகம், மும்பை - புனே சாலை, அகுர்டி, புனே 411035, மகாராஷ்டிரா, இந்தியா **கிளை அலுவலகம்:** பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், எண்.78/4, 3வது தளம், எஸ்.எஸ். டவர், பொன்மேனி புறவழிச் சாலை, பொன்மேனி, மதுரை - 625016,தமிழ்நாடு.

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு**

பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுக் கடன்(கள்)/சொத்து மீதான கடன்(கள்) ஆகியவற்றின் அசல் மற்றும் அதன் மீது சேர்ந்த வட்டி மற்றும் பிற கட்டணங்களைத் திருப்பிச் செலுத்துவதில் தவறியதன் விளைவாக, அக்கடன்(கள்) செயல்படாத சொத்துக்களாக (N.P.A's) மாறியுள்ள கடன்(கள்) உள்ள கடன் வாங்கியவர்(கள்) மற்றும் இணை-கடன் வாங்கியவர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் பின்வரும் அறிவிப்பை வழங்குகிறேன். அதன்படி, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் பிரிவு 13(2) மற்றும் அதன் விதிகளின் கீழ், அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டன, இருப்பினும் அவை வழங்கப்படாமலோ அல்லது விநியோகிக்கப்படாமலோ திருப்பி அனுப்பப்பட்டன, எனவே கடன் வாங்கியவர்(கள்)/கூட்டுக் கடன் வாங்கியவர்(கள்) அவ்வப்போது பெற்றுள்ள கடன் வசதிகளின் கீழ் தங்களுக்குள்ள நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு இந்த வெளியீட்டு அறிவிப்பின் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண்/கடன் வாங்கியவர்(கள்), அடமானம் வைத்தவர்(கள்), உத்தரவாதம் அளித்தவர்(கள்) பெயர் | பாதுகாக்கப்பட்ட அசையாச் சொத்தின் விவரம் | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை |
|---|---|---|
| **412DLP59741723** **எஸ் சிவகுமார் (கடன் வாங்கியவர்), முகவரி:** எண் 1 அக்ரஹாரம் பழங்காநத்தம் மதுரை தமிழ்நாடு 6250030 **மூர்த்தி கிளினிக் (இணை கடன் வாங்குபவர்) எஸ் நாகேஸ்வரி (உத்தரவாதி) இரண்டும்:** எண் 2 அக்ரஹாரம் பழங்கநாதன் கார்ப்பரேஷன் பள்ளிக்கு அருகில், மதுரை கார்ப்பரேஷன் பள்ளி தமிழ்நாடு 625003. | மதுரை மாவட்டம் மதுரை தெற்குப் பதிவு மாவட்டம் மதுரை கூட்டு IV துணைப் பதிவு மாவட்டம் மதுரை தெற்கு தாலுகாவில் தற்போது திருப்பரங்குன்றம் மாவட்டத்தில் உள்ள சொத்தின் அந்தத் துண்டு மற்றும் பார்சல் அனைத்தும் ஹேம்லெட் பழங்காநத்தம் அக்ரஹாரம் நத்தம் தெரு, சர்வே எண் 170/18 D1A, 3 தாக்கு நிலம், 9 சென்ட் 177 சதுர அடி பரப்பளவு கொண்டது. இதில் வடக்குப் பகுதியின் 1869 சதுர அடி, அதாவது 4 சென்ட் 125 சதுர அடி, பின்வருமாறு எல்லைகளால் சூழப்பட்டுள்ளது: வடக்கே: கிழக்கு-மேற்கு அக்ரஹாரம் தெரு, கிழக்கே: ஏ. ரவியின் வீடு மற்றும் காலி நிலம், தெற்கே: - 3வது தாக்கு வீடு, மேற்கே: - சீனிவாச ஐயர் வீடு மற்றும் காலி நிலம். | **25/07/2026** **ரூ.23,62,387/-** (இருபத்தி மூன்று இலட்சம் அறுபத்தி இரண்டு ஆயிரம் முன்னூற்று எண்பத்தி ஏழு ரூபாய் மட்டும்) **23/07/2026** அன்றுள்ள நிலவரப்படி |
| **463LAPFK745871** **சரவணா பல் மருத்துவமனை (கடன் பெற்றவர்)முகவரி:** 97 பாவா மருத்துவக் கட்டிடம், முதல் தளம், ஒய்வூதியர் தெரு, பழனி சாலை, திண்டுக்கல், தமிழ்நாடு 6240010. **சரவணா வெங்கடராமன் எஸ் (கூட்டுக் கடன் பெற்றவர்), கோமதி வி (கூட்டுக் கடன் பெற்றவர்), இருவரும் வசிக்கும் முகவரி:** எண் 75E செட்டிநாயக்கன்பட்டி சாலை, மேற்கு 2, திண்டுக்கல் நகராட்சி, தமிழ்நாடு 624001 | 678 1/4 சதுர அடி பரப்பளவுள்ள அந்த நிலம். மற்றும் கட்டிடம் (தரைத்தளம் & முதல் தளம் 582 சதுர அடி மற்றும் மொத்தம் 1164 சதுர அடி), பழைய கதவு எண் 48, புதிய கதவு எண் 7C, T.S. எண் 1286, வார்டு எண் 6, ஆர்த்தி தியேட்டர் சாலை, YMR பட்டி, திண்டுக்கல், திரு. எஸ். சரவண வெங்கட்ராமன் மற்றும் திருமதி. எஸ். சரஸ்வதி ஆகியோரின் பெயரில் அமைந்துள்ளது. | **25/07/2026** **ரூ.46,14,093/-** (நாற்பத்தி ஆறு இலட்சம் பதினான்கு ஆயிரம் மற்றும் தொண்ணூற்று மூன்று ரூபாய் மட்டும்)**23/07/2026** அன்றுள்ள நிலவரப்படி |

அறிவிப்பை மாற்று முறையில் வழங்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்கூறிய கடன் வாங்கியவர்கள் / இணை-கடன் வாங்கியவர்கள், ஜாமீன்தாரர்கள் ஆகியோர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையையும் எதிர்கால வட்டியையும் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செய்யத் தவறினால் (பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு உள்ள வேறு எந்தவொரு உரிமைத் தீர்விற்கும் பாதிப்பின்றி), நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் பிரிவு 13(4)-இன் படி, பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் / அடமானச் சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடங்கப்படும். மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களைப் பிறருக்கு விற்கவோ, மூன்றாம் தரப்பினருக்கு உரிமை ஏற்படுத்தவோ கூடாது என்றும் மேலே குறிப்பிடப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்தச் சொத்துக்களின் மீது பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொறுப்பு உள்ளது.

**தேதி - 08.08.2026, இடம் - தமிழ்நாடு**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக**

Bandhan Bank

**மண்டல அலுவலகம்: நேதாஜி மார்க், மிதாகாளி சிக்ஸ் ரோடு அருகில், எல்லிஸ்பிரிட்ஜ், அகமதாபாத்-6. தொலைபேசி: +91-26421671-75**

**கடன் பெற்றவர்களுக்கான கோரிக்கை அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு வாராக்கடனாக மாறியதால், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமல்படுத்துதல் சட்டம் (சட்டம்), 2002-இன் பிரிவு 13(2)-இன் கீழ், பந்தன் வங்கி லிமிடெட் பின்வரும் கடன் பெற்றவர்களுக்கு வழங்கிய கோரிக்கை அறிவிப்பு, வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. எனவே, இந்த அறிவிப்பு உங்கள் அனைவருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பிரசுரத்தின் மூலம் வெளியிடப்படுகிறது.

| கடன் வாங்குபவர்(கள்), ஜாமீன்தாரர்கள் மற்றும் கடன் கணக்கு எண்கள் | அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரம் (பாதுகாக்கப்பட்ட சொத்து) | கோரிக்கை அறிவிப்பின் தேதி/NPA தேதி | கோரிக்கை அறிவிப்பின் தேதியின்படி நிலுவைத் தொகை | அறிவிப்பு ஒட்டப்பட்ட தேதி |
|---|---|---|---|---|
| 1. அசோக் கே - கடன் வாங்குபவர் மற்றும் அடமானம் வைப்பவர் 2. கே. மீனாட்சி - இணை-கடன் வாங்குபவர் 3. எம். ஜெனன் - ஜாமீன்தாரர் 20009310002608 | கோயம்புத்தூர் மாவட்டம், காந்திபுரம் துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, சின்னவேடம்பட்டி கிராமம், எஸ்.எஃப்-224/2 இல் உள்ள, 1.36 3/4 புஞ்சை ஏக்கர் பரப்பளவு கொண்ட சொத்தின் ஒரு பகுதி ஏற்கனவே விற்கப்பட்டுவிட்டது. மேலும், ஆவண எண் 3954/1993 இன் படி, அந்தச் சொத்து சிவசாமிக்குச் சொந்தமானது. அதன் பரப்பளவு 4361 சதுர அடி, அதாவது சுமார் 1038 சதுர அடி, அல்லது 2 சென்ட் 166 சதுர அடி, அல்லது 95.88 சதுர அடி ஆகும். 641006 சதுர மீட்டர் நிலம், ஆர்.சி.சி. கட்டிடம் மற்றும் உரிமைகளுடன், ஆர்.சி.டபிள்யூ.இ ஆர்.எச்.டபிள்யூ லேஅவுட் சாலைகள், உள்ளே வருவதற்கும் வெளியே செல்வதற்கும் வழக்கமான பாதை உரிமை, சாலையைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து பிற துணைச் சொத்துக்களும் கொண்டது. உரிமையாளர்: திரு. கே. அசோக், த/பெ கோசுமணி, -, - மற்றும் அதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கே அல்லது அதை நோக்கி: 20 அடி கிழக்கு மேற்கு சாலை, கிழக்கே அல்லது அதை நோக்கி: பூனம்ஸ் சொத்து, மேற்கே அல்லது அதை நோக்கி: ஏ. ஜேம்ஸ் சொத்து, தெற்கே அல்லது அதை நோக்கி: எஸ்.எஃப். 224/2-இல் உள்ள நிலம். | 23 ஜூன் 2026/ 03 ஜூன் 2026 | ரூ.8,23,816.44/- | 05 ஆகஸ்ட் 2026 |
| 1. சந்தோஷ்குமார் சி - கடன் வாங்குபவர் மற்றும் அடமானம் வைப்பவர் 2. எம். கனிமொழி - இணை-கடன் வாங்குபவர் 3. எஸ். சம்பத் குமார் - ஜாமீன்தாரர் 20009500000008 | கோயம்புத்தூர் மாவட்டத்தில், மதுக்கரை துணைப் பதிவு மாவட்டம் மற்றும் மதுக்கரை தாலுக்காவிற்குள், குறிப்பாக சீரப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சொத்தின் ஒரு பகுதி. அந்த நிலம் முதலில் எஸ்.எஃப். உட்பட பல்வேறு சர்வே எண்களைக் கொண்டிருந்தது. 376/2A1, 376/2A2A, 376/2A3, மற்றும் 376/2A4A ஆகிய எண்கள் இணைக்கப்பட்டு, பின்னர் 2021-ல் உள்ளூர் திட்டமிடல் அதிகாரிகளால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட "மலர் கார்டன்" என்ற குடியிருப்பு மனைப்பிரிவாகப் பிரிக்கப்பட்டன. இந்த அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவிலிருந்து, மனை எண் 4 மற்றும் மனை எண் 5 என அடையாளம் காணப்பட்ட இரண்டு குடியிருப்பு வீட்டு மனைகள் அடமானம் வைக்கப்பட்டுள்ளன. இவ்விரு மனைகளும் சேர்ந்து சுமார் 2,660 சதுர அடி (தோராயமாக 247.12 சதுர மீட்டர்) மொத்தப் பரப்பளவைக் கொண்டுள்ளன, இது சுமார் 6 சென்ட் மற்றும் 46 சதுர அடி நிலத்திற்குச் சமமாகும். இந்தச் சொத்தானது, மனைப்பிரிவுச் சாலைகள் மற்றும் பொதுப் பகுதிகளுக்கான அணுகல், பாதை மற்றும் பயன்பாடு ஆகிய அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியது. இது 641105, சீராபாளையம் பஞ்சாயத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஒரு திட்டமிடப்பட்ட மனைப்பிரிவின் ஒரு பகுதியாக அமைந்துள்ள ஒரு காலி குடியிருப்பு நிலப் பார்சல் ஆகும். இதன் உரிமையாளர்கள்: திரு. சி. சந்தோஷ்குமார், சந்திரனின் மகன், மற்றும் செல்வி. எம். கனிமொழி, சந்தோஷ்குமாரின் மனைவி. இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்குப் பக்கம்: 9 மீட்டர் அகல மனைப்பிரிவுச் சாலை, கிழக்குப் பக்கம்: மனை எண் 3, மேற்குப் பக்கம்: அருகிலுள்ள மனைப்பிரிவு நிலங்கள், மனை எண் 5, தெற்குப் பக்கம்: மனை எண் 5. | 24 ஜூன் 2026 / 03 ஜூன் 2026 | ரூ.20,54,132.74/- | 05 ஆகஸ்ட் 2026 |
| 1. செல்வகுமார் சம்பத் கடன் வாங்குபவர் மற்றும் அடமானம் வைப்பவர் 2. எஸ். அனு - இணை-கடன் வாங்குபவர் 90000000572496 | சொத்தின் அந்தத் துண்டுப் பகுதி கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பதிவு மாவட்டம், துடியலூர் துணைப் பதிவு மாவட்டம், ஜோதிபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தச் சொத்தானது சர்வே எண் 467/2B - இல் அடங்கியுள்ள நிலத்தின் ஒரு பகுதியாகும் (இது உரிமை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முந்தைய சர்வே உட்பிரிவுகளிலிருந்து பெறப்பட்டது). இந்தச் சொத்தானது, சுமார் 987 சதுர அடி பரப்பளவுள்ள ஒரு வீட்டு மனையையும், அதனுடன் இணைந்த அனைத்து சலுகை மற்றும் துணை உரிமைகளையும் கொண்டுள்ளது. பரப்பளவு-987 சதுர அடி, 641019. திரு. எஸ். செல்வகுமார், த/பெ சம்பத், என்பவருக்குச் சொந்தமானது. மேலும் இது பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளது: வடக்குப் பக்கம்: 23 அடி சாலை, கிழக்குப் பக்கம்: அருகிலுள்ள சொத்து, மேற்குப் பக்கம்: அருகிலுள்ள சொத்து, தெற்குப் பக்கம்: சர்வே எண் 467/18-இல் உள்ள சொத்து. | 27 ஜூன் 2026/ 03 ஜூன் 2026 | ரூ.24,96,337.89/- | 05 ஆகஸ்ட் 2026 |
| 1. சோபனா மேரி ஜோசப் அந்தோணி முத்து - கடன் வாங்குபவர் & அடமானம் வைப்பவர் 2. ஆர். விக்னேஷ் - இணை-கடன் வாங்குபவர் 90001111495323 | கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டம், பெரியநால்கன்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, குருடம்பாளையன் கிராமத்திற்குள் அமைந்துள்ள நிலப்பகுதி. இந்தச் சொத்தானது சர்வே எண் 489/2-இல் இருந்து உருவானது. இது, புதுப்பிக்கப்பட்ட பட்டா ஆவணங்களின்படி, சர்வே எண்கள் 489/2A, 489/2B மற்றும் மேலும் 489/282 உட்பட பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலம் முதலில் சுமார் 1.69 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு பெரிய நிலமாக இருந்தது. உள்ளாட்சித் திட்ட ஆணையம் மற்றும் பஞ்சாயத்திடம் இருந்து தேவையான அனுமதிகளைப் பெற்ற பிறகு, இது வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளது. இந்த மனைப்பிரிவு "ஓம் சக்தி காஸில்" என்று அழைக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள மனை எண் 21, சுமார் 1331 சதுர அடி (சுமார் 123.65 சதுர மீட்டர்) பரப்பளவைக் கொண்டுள்ளது, இது சுமார் 3 சென்ட்களுக்குச் சமம். இந்த இடத்தில், சுமார் 1180 சதுர அடி பரப்பளவு கொண்ட, ஆர்.சி.சி (R C C) கட்டமைப்பில் கட்டப்பட்ட ஒரு குடியிருப்பு கட்டிடம் உள்ளது. அதனுடன் வழக்கமான அனைத்துப் பொருத்திகள், கதவுகள், சட்டங்கள் மற்றும் கட்டமைப்பு மேம்பாடுகளும் இணைக்கப்பட்டுள்ளன. பரப்பளவு - 1331 சதுர அடி, 641017. உரிமையாளர்: திரு. வி. சோபனா மேரி, மனைவி விக்னேஷ், -, - மற்றும் இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்குப் பக்கம்: மனை எண் 24, கிழக்குப் பக்கம்: மனை எண் 20, மேற்குப் பக்கம்: மனை எண் 22, தெற்குப் பக்கம்: 9 மீட்டர் அகலமுள்ள கிழக்கு-மேற்கு மனைப்பிரிவு. சாலை. | 27 ஜூன் 2026/ 03 ஜூன் 2026 | ரூ.45,24,969.79/- | 05 ஆகஸ்ட் 2026 |
| 1. எஸ். மணிகண்டன் - கடன் வாங்குபவர் 2. எம். காயத்ரி - இணை-கடன் வாங்குபவர் & அடமானம் வைப்பவர் 90001238247450 & 90001256304211 | கோயம்புத்தூர் வடக்கு தாலுக்காவில் உள்ள பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு மாவட்டத்திற்குள், கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டத்தில், கூடலூர் கிராமத்தில் அமைந்துள்ள, 9.0772 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு பெரிய நிலப்பரப்பின் பகுதியாக உள்ள, சதுர அடி எண் 819 உடைய அந்த நிலப்பகுதி. இதில், 4.5372 ஏக்கர் பரப்பளவுள்ள வடக்குப் பகுதியில் உள்ள நிலம், கோயம்புத்தூர் உள்ளூராட்சி மன்றத்தால் (மா வா முறைப்படுத்தல், ஒப்புதல் எண் ஹாசா 15/2022) அங்கீகரிக்கப்பட்டு, "ஸ்ரீ ராம் அவென்யூ" எனப் பெயரிடப்பட்ட ஒரு குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. இந்தச் சொத்தானது, மனை எண் 15-ஐ உள்ளடக்கியது, இது மொத்தமாக 1575 சதுர அடி (தோராயமாக 146.321 சதுர மீட்டர் அல்லது 3 சென்ட் மற்றும் 268 சதுர அடி) காலி நிலத்தைக் கொண்டுள்ளது. கூடலூர் நகராட்சியின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு, இந்தச் சொத்தானது கிழக்கு-மேற்காக இருபுறமும் 45 அடியும், வடக்கு-தெற்காக இருபுறமும் 35 அடியும், அனைத்து வழித்தட உரிமைகளுடன் அமைந்துள்ளது. பரப்பளவு - 1575 சதுர அடி, 641020. உரிமையாளர்: செல்வி எம். காயத்ரி, த/பெ எஸ். மணிகண்டன், -, - மற்றும் இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கே மனை எண் 14 மற்றும் மனை எண் 16; கிழக்கே மனைச் சாலை (வடக்கு-தெற்குச் சாலை); மேற்கே மனை எண் 8; தெற்கே மற்ற மனைப் பகுதிகள். | 27 ஜூன் 2026/ 10 ஜூன் 2026 | ரூ.30,70,930.15/- | 05 ஆகஸ்ட் 2026 |

இந்த அறிவிப்பின் மூலம், வங்கிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை, கூடுதல் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன், இதன் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு உங்களுக்குக் கோரிக்கை விடுக்கப்படுகிறது. அவ்வாறு செய்யத் தவறினால், SARFAESI சட்டத்தின் பிரிவு 13(4)-இன் கீழ் வங்கி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கும். பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இன் விதிகளுக்குக் கடன் வாங்கியவர்கள்/அடமானம் வைத்தவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**இடம்: அஸ்ஸாம், தேதி: 30 ஜூலை 2026**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பந்தன் வங்கி லிமிடெட்**

### நாடாளுமன்ற கூட்டத் தொடரில்

# தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு ஆதரவளிக்க தி.மு.க. 3 நிபந்தனைகள்

## பின்னணி தகவல்கள்

**சென்னை, ஆக 8**

மக்களவைத் தொகுதி மறுவரையறைக்கான அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது இந்நிலையில், குறிப்பிட்ட மூன்று நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே அந்த மசோதாவுக்கு ஆதரவு அளிப்பது பற்றி தி.மு.க. பரிசீலிக்கும் என்று தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேநேரம், இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை தங்களை மத்திய அரசு அதிகாரப்பூர்வமாகவோ, அதிகாரப்பூர்வமற்ற முறையிலோ தங்களை அணுகவில்லை என்றும் தி.மு.க. தரப்பு தெரிவித்துள்ளது.

மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளுக்கான தொகுதி மறுவரையறை சட்டத்தை நிறைவேற்ற கடந்த நாடாளுமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட மசோதா போதிய ஆதரவின்றி நிறைவேற்ற முடியாமல் போனது. ஆனால் தற்போது, சில மாநில கட்சிகளின் ஆதரவுகளுடன் மீண்டும் மசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்ற மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு முனைப்புக் காட்டி வருகிறது. இந்நிலையில், தொகுதி மறுவரையறை மசோதாவில் மூன்று முக்கிய திருத்தங்களைச் செய்தால் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகத் திமுக தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, தற்போது நடைமுறையில் உள்ள 1971 மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது என்ற முறையை மேலும் 25 ஆண்டுகளுக்கு நீட்டிக்க திமுக வலியுறுத்தியுள்ளது. அடுத்து 2வது நிபந்தனையாக, அனைத்து மாநிலங்களுக்கும் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 50 சதவீதம் உயர்த்த வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் தொகுதி மறுவரையறை தொடர்பான சட்டத் தொகுப்பை மக்களவையில் அறிமுகப்படுத்தியபோது, அனைத்து மாநிலங்களுக்கும் 50 சதவீதம் கூடுதல் தொகுதிகள் வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வாய்மொழியாக உறுதி அளித்ததாகவும், அந்த உறுதியை அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று திமுக கோரியுள்ளது. 3வது நிபந்தனையாக, தொகுதி மறுவரையறைக்குப் பிறகு ஒவ்வொரு மாநிலத்துக்கும் எத்தனை மக்களவைத் தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது குறித்து மசோதாவிலேயே தனி அட்டவணை இடம்பெற வேண்டும் என்றும் தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

இந்த மூன்று நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே மசோதாவுக்கு ஆதரவு அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என தி.மு.க. தரப்பு தெரிவித்துள்ளன. இருப்பினும், மசோதாவின் இறுதி வடிவம் மற்றும் அதன் முழு உள்ளடக்கம் வெளியான பிறகே கட்சியின் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதற்கான அரசியல் கணக்கீட்டிலும் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த ஏப்ரல் 17 ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்ட (131 வது) திருத்த மசோதா தோல்வியடைந்தபோது இருந்த அரசியல் சூழல் தற்போது மாறியிருப்பதாக டெல்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது 540 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையில் அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை (360 வாக்குகள்) தேவை. தி.மு.க.வின் 22 எம்.பி.க்களும் ஆதரவு அளித்தால் மத்திய அரசின் பலம் 346 ஆக உயரும். அப்போதும் 14 வாக்குகள் குறைவாக இருக்கும். எனினும், வாக்கெடுப்பின்போது சில உறுப்பினர்கள் பங்கேற்காமல் இருந்தால், தேவையான பெரும்பான்மை எண்ணிக்கை குறைய வாய்ப்பு இருப்பதால், மசோதா நிறைவேறும் சூழல் உருவாகலாம் என பா.ஜ.க. தரப்பு கருதுகிறது. .

மாநிலங்களவையிலும் இந்த மசோதாவை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியம். 244 உறுப்பினர்களும் வாக்களித்தால் மசோதாவை நிறைவேற்ற பெரும்பான்மைக்கு 164 வாக்குகள் தேவைப்படும். தற்போது பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியிடம் (என்டிஏ) 158 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, மக்களவையைவிட மானிலங்களவையில் தேவையான பெரும்பான்மையைப் பெறுவது மத்திய அரசுக்கு எளிதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

தேவையான ஆதரவு உறுதியானதும், மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 850 ஆக உயர்த்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா மீண்டும் கொண்டு வரப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஏற்கெனவே தெரிவித்திருந்தார். புதிய தொகுதி மறுவரையறைக்குப் பிறகு பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறியிருந்தார். கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு அரசியல் களத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. திரிணமூல் காங்கிரஸிலிருந்து பிரிந்து தற்போது தேசிய குடிமக்கள் கட்சி சார்பில் உள்ள 20 எம்.பி.க்களின் ஆதரவையும், உத்தவ் தாக்கரே அணியில் இருந்து ஏக்நாத் ஷிண்டே அணிக்கு மாறிய 6 சிவசேனா எம்.பி.க்களின் ஆதரவையும் மத்திய அரசு பெற்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியின் ஒரு பகுதியாக மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தியை அண்மையில் சந்தித்து பேசியுள்ளார். தொடர்ந்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று ரிஜிஜு தெரிவித்திருந்தாலும், தொகுதி மறுவரையறை மசோதா குறித்து இதுவரை தங்களை யாரும் அணுகவில்லை என்று தி.மு.க. தரப்பு கூறியுள்ளது.

தற்போது மழைக்காலகூட்டத்தொடர் நடைபெற்றுவரும் நிலையில், தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயன்று வருகிறது. மசோதாவை கொண்டுவரும் முன் அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசிக்க வேண்டுமென மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கேட்டுக்கொண்டதாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார். இதற்கிடையே, தொகுதி மறுவரையறை மசோதா குறித்து முதலமைச்சர் விஜய் தலைமையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (ஆக 8ஆம் தேதி) நடைபெறுகிறது. அதன்படி, தொகுதி மறுவரையறை பணிகள் மற்றும் அதன் தாக்கம் குறித்து முதலமைச்சர் விஜய் தலைமையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் கலந்தாய்வுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கில் நாளை நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்க தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.பி.க்களுக்கு டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் தி.மு.க. எம்.பி.க்கள் பங்கேற்பார்களா என்பது குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் கொண்டு வர மத்திய அரசு தீவிரம் காட்டி வரும் நிலையில், திமுக முன்வைத்துள்ளதாகக் கூறப்படும் இந்த மூன்று நிபந்தனைகள் ஏற்கப்படுமா, அல்லது இரு தரப்புக்கும் இடையே அரசியல் சமரசம் ஏற்படுமா என்பதே தற்போது டெல்லி அரசியலில் முக்கிய எதிர்பார்ப்பாக மாறியுள்ளது.

### உயர்கல்வித்துறை மானியக்கோரிக்கை குறித்து

# அரசு உயர் அதிகாரிகளுடன் அமைச்சர் விஸ்வநாதன் ஆலோசனை

சென்னை, ஆக.8–

உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கை தொடர்பாக அரசு உயர் அதிகாரிகளுடன் உயர்கல்வித் துறை அமைச்சர் பி.விஸ்வநாதன் நேற்று ஆலோசனை நடத்தினார். சட்டப்பேரவையில் பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட் மீதான விவாதத்தை தொடர்ந்து துறைகள் வாரியான மானியக் கோரிக்கை மீதான விவாதம் ஆகஸ்டு 17–ம் தேதி தொடங்க உள்ளது. இந்நிலையில், உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கை தொடர்பான ஆய்வு கூட்டம் உயர் கல்வி அமைச்சர் பி.விஸ்வநாதன் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்தது.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறைசெயலர் தீரஜ் குமார், ரஷ்மி சித்தார்த் ஜகடே, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் பி. ரத்தினசாமி, கல்லூரிக் கல்வி ஆணையர் பா. பொன்னையா, தமிழ்நாடு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் எஸ்.மலர்விழி, அறிவியல்நகரதுணைத்தலைவர் எஸ்.விசாகன், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கவுன்சில் உறுப்பினர், செயலர் எஸ்.வின்சென்ட் மற்றும் பல்கலைக் கழகங்களின் பதிவாளர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உயர்கல்வித்துறை சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகள், பல்கலைக்கழகங்களில் ஒருங்கிணைந்த பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது, ஆசிரியர் அல்லாத காலிப் பணியிடங்களை நிரப்புவது, துணை வேந்தர்கள் நியமனம் உள்ளிட்டவை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



நெல்லை டவுண் பாப்பா தெரு அருகே உள்ள வயலில் தண்ணீர் இன்றி கருகிய நெல் நாற்றுகளை படத்தில் காணலாம்.



தென்காசி மாவட்டம் சுந்தரபாண்டியபுரம் பகுதியில் பூத்துக்குலுங்கும் சூரியகாந்தி பூக்களை ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தந்து செல்பி எடுத்து மகிழ்கின்றனர்.

### வார இறுதிநாளையொட்டி

# 1,805 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

## போக்குவரத்து துறை தகவல்

**சென்னை, ஆக 8–**

வார இறுதி நாளையொட்டி 1,805 சிறப்பு பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வார விடுமுறை நாட்களில் சென்னையில் இருந்து பிற மாவட்டங்களுக்கு பயணிக்கும் மக்கள் நலன் கருதி போக்குவரத்துத் துறை மூலமாக தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கமுடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னைகிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று 430 பேருந்துகளும், நாளை 465 பேருந்துகளும் இயக்கதிட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்றைய தினம் 110 பேருந்துகளும், நாளை 110 பேருந்துகளும் இயக்கப்படும். மேலும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து இன்று, நாளை கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், வேலூர், ஓசூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு நாளும் 80 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிறுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை, பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் அன்றைய தினம் 410 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். இந்த வார இறுதியில் சொந்த ஊர் செல்ல இன்றைய தினம் 8,570 பயணிகளும், நாளை 3,158 பயணிகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமை 8,953 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்துக்கு www.tnstc.in மற்றும் டி.என்.எஸ்.டி.சி. மொபைல் செயலி மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்கிறோம்.

# பண்டைய தமிழர்கள் உணவில் அதிகளவு இறைச்சி பயன்பாடு

## கீழடி மரபணு ஆய்வில் புதிய தகவல்

**சென்னை, ஆக.8–**

பண்டைய தமிழர்கள் உணவில் அதிகளவு இறைச்சி பயன்பாடு உள்ளதாக கீழடி மரபணு ஆய்வில் புதிய தகவல்வெளியாகியுள்ளது.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் 2014ம் ஆண்டு அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. நான்கு கட்டமாக நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி ஆய்வுப் பணியில், 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான பல்வேறு அரிய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அகழ்வாராய்ச்சியின்போது தொடக்க காலத்தைச் சேர்ந்த செங்கல் கட்டிடங்கள், பல்வேறு வகையான மணிகள், தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகள், தங்க ஆபரணங்கள், தந்தத்தால் ஆன தாயக் கட்டைகள், மனிதஉடல் சுடுமண் உருவம், சுடுமண் மனித முகம், சுடுமண் காதணி, இரும்பாலான போர்க் கருவிகள் உள்ளிட்ட 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆச்சரியமளிக்கும் தொன்மையான நாகரீகங்கள் குறித்த தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த நிலையில் கீழடி அகழாய்வுத் தளத்தின் கொந்தகைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் முதுமக்கள் தாழிகளில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக மரபணுத் துறை மேற்கொண்ட ஆய்வில், பண்டைய தமிழர்கள் அதிகளவில் இறைச்சியை உணவாகக் உட்கொண்டது தெரியவந்துள்ளது.

முதுமக்கள் தாழிகளின் பக்கச்சுவர்களில் அதிகளவில் கொழுப்புப் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம் கீழடி மக்கள் இறைச்சியை முதன்மை உணவாக அதிகளவில் உட்கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தானியங்கள் மற்றும் பால், இறைச்சி மட்டுமின்றி தினை, அரிசி தேங்காய் ஆகியவற்றையும் அவர்கள் அன்றாட உணவில் பெருமளவில் பயன்படுத்தியுள்ளனர்.

தாழிகளில் இருந்த எலும்புத் திசுக்கள், கொழுப்புப் படிமங்கள் மற்றும் பற்களில் படிந்திருந்த பாக்டீரியாக்களை வைத்து சுமார் 75,000 மரபணு குறியீடுகள் மூலம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

கொந்தகையில் கி.மு. 600, ஆதிச்சநல்லூரில் கி.மு. 1,000 மற்றும் சிவகளையில் கி.மு. 3,300 ஆகிய காலக்கட்டங்களைச் சேர்ந்த மனித எச்சங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பண்டைய தமிழர்களின் மரபணு அமைப்பு, தற்போதைய தமிழக மக்கள், இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் தென்கிழக்கு ஆசிய மக்களின் மரபணு அமைப்போடு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது.

### வங்கி கணக்கிற்கு மர்மமாக வந்த பணம்

# தமிழகம் முழுவதும் கர்ப்பிணி பெண்கள் உட்பட 80– க்கும் மேற்பட்டோர் அதிரடி கைது

## சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் சைபர் கிரைம் போலீசார் தீவிர விசாரணை

**சென்னை, ஆக.8**

தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில், வங்கி கணக்கிற்கு ஆன்லைன் மூலம் மர்மமான முறையில் பணம் வந்த விவகாரத்தில், 80க்கும் மேற்பட்டோரை சைபர் கிரைம் போலீசார் அதிரடியாக கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இளைஞர்கள், பெண்கள் மற்றும் கர்ப்பிணி பெண்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை பெரம்பூர், வியாசர்பாடி, ஆவடி உள்ளிட்ட பகுதிகள் மற்றும் கிருஷ்ணகிரி, வேலூர், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக காவல்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது, யாருடைய வங்கி கணக்குகளுக்கு எல்லாம் ஆன்லைன் மூலமாக அதிகப்படியான தொகை வரவு வைக்கப்பட்டதோ, அவர்களை அடையாளம் கண்டு போலீசார் கைது செய்துள்ளனர்.

தமிழகம் முழுவதிலும் இருந்து கைது செய்யப்பட்ட 80க்கும் மேற்பட்ட நபர்கள், சென்னை வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அங்குள்ள சைபர் கிரைம் அலுவலகத்தில் வைத்து அவர்களிடம் உயர் அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், கைது செய்யப்பட்டவர்களில் சிலர் சிறார்கள் என்பதும், அவர்கள் ஆன்லைன் விளையாட்டுகளை (Online Games) விளையாடிய போது, அவர்களின் வங்கி கணக்கிற்கு 50,000 முதல் 90,000 ரூபாய் வரை பணம் வரவு வைக்கப்பட்டதும் தெரியவந்துள்ளது. இந்தப் பணப் பரிமாற்றங்கள் சட்டவிரோதமானவையா அல்லது மோசடி கும்பலுடன் இவர்களுக்குத் தொடர்பு உள்ளதா என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தற்போது சம்பந்தப்பட்டவர்களின் வங்கி கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கைது நடவடிக்கை குறித்து பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தங்களது குமுறல்களைத் தெரிவித்துள்ளனர். "எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி, முறையான காரணம் சொல்லாமல் போலீசார் தங்களது பிள்ளைகளையும், உறவினர்களையும் அழைத்து வந்துள்ளனர்.

குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாணவர்களைக் கூட போலீசார் விட்டு வைக்கவில்லை" என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

காவல் ஆணையர் அலுவலகத்தில் குவிந்துள்ள பெற்றோர்களால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் பெரிய அளவிலான சைபர் மோசடி கும்பல் பின்னணியில் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# அமலாக்கத்துறை அதிகாரி லஞ்சம் பெற்ற வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றலாம்

## உச்ச நீதிமன்றம் கருத்து






புதுடெல்லி, ஆக.8

சொத்துக் குவிப்பு வழக்கில் மறு விசாரணை நடத்தாமல் இருக்க, அரசு மருத்துவரிடம் லஞ்சம் பெற்ற அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி தொடர்பான வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திண்டுக்கல் அரசு மருத்துவர் சுரேஷ் பாபுவிடம், வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை குவித்த வழக்கில் மறு விசாரணை நடத்தாமல் இருக்க ரூ.20 லட்சம் லஞ்சம் பெற்றதாக, மதுரை அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியை லஞ்ச ஒழிப்பு போலீஸார் கடந்த 2023-ல் கைது செய்தனர்.

மேலும், அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி பணியாற்றும் மதுரை தபால் தந்தி நகரில் உள்ள அமலாக்கத் துறையின் உதவி மண்டல அலுவலகத்தில், லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

இந்நிலையில், அங்கித் திவாரி லஞ்சம் வாங்கியதாக குற்றம்சாட்டப்பட்ட விவகாரத்தில், அமலாக்கத்துறை தரப்பிலும் வழக்குப் பதிவு செய்ததோடு, அங்கித் திவாரியிடம் துறை ரீதியாக தங்களது கட்டுப்பாட்டில் விசாரிக்க அனுமதிக்க வேண்டும். குறிப்பாக, அவர் லஞ்சம் வாங்கியது உண்மைதானா என்பதை விசாரிக்க வேண்டியுள்ளது.

எனவே, அவரை அமலக்கத்துறை வசம் ஒப்படைக்க வேண்டும் எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை திண்டுக்கல் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தள்ளுபடி செய்தது.

இதைத் தொடர்ந்து, அமலாகத் துறை தரப்பில் உச்ச நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், லஞ்சம் வாங்கப்பட்டதாக கூறப்படும் விவகாரத்தில் அங்கித்திவாரியை துறை ரீதியிலான கட்டுப்பாட்டில் எடுத்து விசாரணை நடத்த உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. அந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், அங்கித் திவாரிக்கு எதிராக தமிழக லஞ்ச ஒழிப்பு காவல் துறை விசாரணை நடத்துவதற்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. அதேவேளையில், அங்கித் திவாரி உச்ச நீதி மன்றத்தை அணுகி இடைக்கால ஜாமீன் பெற்றார்.

இதனையடுத்து, இது தொடர்பான வழக்கு உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய் மால்யா பக்ஷி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் குரு கிருஷ்ணகுமார் ஆஜராகி, அமலாக் கத் துறை அதிகாரியான அங்கித்திவாரி லஞ்சம் பெற்று கையும் களவுமாக பிடிபட்ட நிலையில், அமலாக்கத்துறை தங்கள் அதிகாரி மீது தவறாக வழக்கு பதியப்பட்டிருப்பதாக தெரிவித்து வருகின்றனர்,

அப்படி இருக்கையில், அவர்களின் விசாரணையில் எப்படி உண்மை வெளிவரும்.

எனவே, அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி லஞ்சம் பெற்ற வழக்கை தமிழக லஞ்ச ஒழிப்பு காவல் துறையே விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும். அதற்கு ஏதுவாக உச்ச நீதி மன்றம் விதித்துள்ள தடை உத்தரவை நீக்க வேண்டுமென வலியுறுத்தியதோடு, இந்த விவகாரத்தில் தமிழக காவல் துறைக்கான விசாரணை அதிகார வரம்பை விட்டுக்கொடுக்க இயலாது என்றும் தெரிவித்தார்.

குற்றச்சாட்டு உண்மையானதா? - ஆனால், தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், அமலாக்கத் துறை அதிகாரி லஞ்சம் பெற்ற வழக்கு விசாரணையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று மாநில அரசு உறுதியுடன் தெரிவித்து வருகிறது.

அதே வேளையில், அமலாக்கத் துறை அதிகாரி மீதான குற்றச்சாட்டு உண்மையானதா என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அங்கித் திவாரி மீதான குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இருக்கும் பட்சத்தில், அந்த வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்கலாம் என தெரிவித்தனர்.

அப்போது, அமலக்கத் துறை தரப்பில் வழக்கை வேறு தேதிக்கு ஒத்திவைக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. இதனையடுத்து, வழக்கு விசாரணை இரண்டு வாரகாலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# ராமர் கோயில் காணிக்கை திருட்டு

# எதிர்க்கட்சிகள் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகளும் முடக்கம்



புதுடெல்லி, ஆக.8

எதிர்க்கட்சிகளின் அமளியால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று முடங்கின. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 20-ம் தேதி தொடங்கியது. நீட் வினாத்தாள் கசிவு, மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தடியடி, அயோத்தி ராமர் கோயில் காணிக்கை திருட்டு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை எழுப்பி மழைக்கால கூட்டத் தொடரை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முடக்கி வருகின்றன.

இந்த சூழலில் நேற்று காலை 11 மணிக்கு மக்களவை கூடியது. அப்போது கடந்த 1945-ம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமாவில் நடத்தப்பட்ட அணுகுண்டு தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். கடந்த ஜூலை 20-ம் தேதி நாடாளுமன்றம் நோக்கி நடந்த பேரணியின் போது மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தடியடி குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவையில் விளக்கம் அளிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். கடும் அமளியால் பிற்பகல் 2 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடிய போது எதிர்க்கட்சி எம்பிக்கள் வழக்கம்போல அமளியில் ஈடுபட்டனர். கடும் அமளிக்குநடுவே வரிவிதிப்பு மற்றும் இதர சட்டங்கள் (திருத்த) மசோதா 2026-ஐ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இந்த மசோதா விவாதம் இன்றி நிறைவேற்றப்பட்டது. இதன்பிறகு தொடர் அமளி காரணமாக நாள் முழுவதும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவை நேற்று காலை 11 மணிக்கு கூடியது. அப்போது காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசும் போது, ''மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தடியடி தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியும், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் அவையில் விளக்கம் வேண்டும்'' என்றார். இதற்கு நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, ''மாநிலங்களவைக்கு குறிப்பிட்ட துறையின் அமைச்சர் வர வேண்டும் என்று கார்கே உத்தரவிட முடியாது'' என்றார்.

இந்த விவகாரத்தால் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி எம்பிக்கள் பரஸ்பரம் கோஷமிட்டனர். இதனால் பிற்பகல் 2.15 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் மாநிலங்களவை கூடியபோது எதிர்க்கட்சி எம்பிக்கள் கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் தலைவர் கார்கே கூறும்போது, ''மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆணவத்துடன் செயல்படுகிறார். மாணவர்கள் மீது பெல்லட் குண்டுகளை பயன்படுத்தியது குறித்து அவர் விளக்கம் அளிக்க வேண்டும்'' என்றார். கடும் அமளியால் மாநிலங்களவை ஒரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அவை கூடிய போது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், நிதி ஒதுக்கீடு (எண் 3) மசோதா 2006 குறித்து பேசினார்.

பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா மூலம் மத்திய அரசின் கூடுதல் செலவினங்களுக்காக ரூ.54,067 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பின்னர் மாலை 5 மணி அளவில் மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

# உ.பி.யில் நிகழ்ந்த கார் விபத்தில்

# ரவுடி அதிக் அகமது மகன் உட்பட 2 பேர் உயிரிழப்பு




ஜான்சி, ஆக.8

உத்தரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் அதிக் அகமது. பிரபல ரவுடி கும்பல் தலைவரும் அரசியல்வாதியுமான இவரை ஒரு வழக்கில் கடந்த 2023 ஏப். 15-ம் தேதி போலீஸார் கைது செய்தனர்.

பிரயாக்ராஜில் மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது, செய்தியாளர்களாக நடித்து உடன் வந்த மூவர், அதிக் அகமது (60) மற்றும் அவரது சகோதரர் அஷ்ரஃபை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இந்த இரட்டைக் கொலை சம்பவம் அப்போது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதிக் அகமதுவுக்கு 5 மகன்கள் உள்ளனர்.

இந்நிலையில், இவரது இளைய மகனான அபான் தனது நண்பர்களுடன் காரில் ஜான்சியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனது சகோதரர்கள் உமர் மற்றும் அலி ஆகியோரை சந்திக்க சென்றார். வழியில் பூஞ்ச் என்ற இடத்தில் சென்ற போது, அவர்கள் சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து சாலைத்தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், காரில் பயணம் செய்த அபான் அகமது மற்றும் அவரது நண்பர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், காரில் பயணம் செய்த 3 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அங்குள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிக் அகமதுவின் மற்றொரு மகனான அசத் அகமது, 2005-ம் ஆண்டு பகுஜன் சமாஜ் கட்சி எம்எல்ஏ ராஜு பால் கொலை வழக்கின் முக்கிய சாட்சியாக இருந்த உமேஷ் பால் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த நிலையில், 2023 ஏப்ரலில் ஜான்சி அருகே போலீஸ் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# தெஹல்கா நிறுவனருக்கு 10 ஆண்டு சிறை

## பாலியல் வழக்கில் மும்பை உயர் நீதிமன்றம் தீர்ப்பு



பனாஜி, ஆக.8

பாலியல் வன்கொடுமை வழக்கில் தெஹல்கா நிறுவனர் தருண் தேஜ்பாலுக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்து, மும்பை உயர் நீதிமன்ற கோவா கிளை நேற்று தீர்ப்பு வழங்கியது.

நாட்டின் பிரபலமான புலனாய்வு இதழ்களில் ஒன்று தெஹல்கா. கடந்த 2013-ம் ஆண்டு நவம்பரில், தெஹல்காவின் வருடாந்திர 'திங்க்பெஸ்ட்' நிகழ்ச்சி கோவாவில் நடைபெற்றது.

அப்போது, அதன் நிறுவனரும் ஆசிரியருமான தருண் தேஜ்பால் (62) விடுதியின் மின்தூக்கியில் தன்னை பாலியல் வன்கொடுமை செய்தார் என அந் நிறுவன பெண் ஊழியர் ஒருவர் புகார் அளித்திருந்தார்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட தேஜ்பால் பின்னர் ஜாமினில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த கோவா விசாரணை நீதிமன்றம், 2021-ல் தருண் தேஜ்பால் மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை எனக் கூறி அவரை விடுவித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து கோவா அரசு மும்பை உயர் நீதிமன்றத்தின் கோவா கிளையில் மேல் முறையீடு செய்தது.

நீதிபதிகள் டாக்டர் நீலா கோகலே மற்றும் அமித் ஜம் சந்தேகர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. விசாரணை முடிந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், ''இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) பிரிவு 376(2)(ஞ), 376(2)(டு) மற்றும் 354அ, 354ஆ ஆகியவற்றின் கீழ் தருண் தேஜ்பால் மீதான பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு நிரூபணமாகி உள்ளது.

எனவே, அவரை விடுதலை செய்து பிறப்பித்த கீழ் நீதி மன்றத் தீர்ப்பை ரத்து செய்கிறோம். மேலும் தேஜ்பால் இந்த வழக்கில் குற்றவாளி என அறிவிக்கிறோம்'' என்றனர்.

முன்னதாக தீர்ப்பு வாசிக்கப்பட்டபோது தேஜ்பால் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

அப்போது, தனக்கு இப்போது 62 வயதாகிறது என்றும் மனைவி, 2 பிள்ளைகள் இருப்பதால் கருணை காட்டும்படி அவர் வேண்டுகோள் விடுத்தார். இதுபோல அவருக்கு குறைந்தபட்ச தண்டனை விதிக்க வேண்டும் என அவரது வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து நேற்று பிற்பகலில் தண்டனை விவரம் அறிவிக்கப்பட்டது.

அப்போது, தருண் தேஜ்பாலுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்படுவதாகவும் 2 வாரத்துக்குள் அவர் சரணடைய வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# எஸ்.சி, எஸ்.டி பிரிவினருக்கு 'கிரீமிலேயர்' கொள்கையை அமல்படுத்த முடியாது

## மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல்



புதுடெல்லி, ஆக.8

எஸ்.சி, எஸ்டி சமூக பிரிவுகளில் பொருளாதாரத்தில் முன்னேறியவர்களை 'கிரீமி லேயர்' என வகைப்படுத்தி இடஒதுக்கீடு பலனில் இருந்து நீக்கக்கோரிய மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

இட ஒதுக்கீட்டுக்கான பலன்கள் ஏழை மக்களைச் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில், கொள்கைகளை வகுக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், பட்டியலின, பழங்குடியின வகுப்பில் (எஸ்சி, எஸ்டி) உள்ள பொருளாதாரத்தில் முன்னேறியவர்கள், இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பலன்களைப் பெற்றுவிடுகின்றனர்.

ஆனால், அதே சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் இடஒதுக்கீட்டின் பலனை பெறாமல் உள்ளனர். இது இட ஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைக்கிறது.

எனவே, பொருளாதாரத்தில் முன்னேறியவர்களை இடஒதுக்கீடு பலனில் இருந்து நீக்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கானது உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, மத்திய அரசு பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்தது இந்நிலையில் இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ள மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், எஸ்.சி, எஸ்.டி, பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டில் வருமானம் அடிப்படையில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை எதிர்ப்பதாக தெரிவித்துள்ளது.

'கிரீமி லேயர்' விலக்கு என்பது பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்குப் பொருந்தாது என்றும், அரசியல் சாசனத்தின் பிரிவுகள் 341 மற்றும் 342-ன் கீழ் பட்டியல் சாதியினர், பழங்குடியினரை வகைப்படுத்த நாடாளுமன்றத்தால் மட்டுமே முடியும் எனவும் நீதிமன்றங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்றும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# அமராவதியில் ரூ.1,002 கோடியில் குவாண்டம் மையம்

## ஆந்திர மாநில அமைச்சரவை ஒப்புதல்




அமராவதி, ஆக.8

ஆந்திர தலைநகர் அமராவதியில் குவாண்டம் தொழில்நுட்ப மையத்துக்காக ரூ.1,002.49 கோடி செலவில் கட்டிடங்கள் கட்ட மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் அமராவதியில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில் 34 அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக ஆந்திர தலைநகர் அமராவதியில் குவாண்டம் தொழில்நுட்ப மையத்துக்காக ரூ.1,002.49 கோடி செலவில் 36 மாடிகள் கொண்ட இரட்டை கோபுர கட்டிடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் எல் அண்ட் டி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

பெண்கள் பாதுகாப்புக்கு கடந்த ஜெகன் அரசில் திசா-2019 சட்டம் இயற்றப்பட்டது. இதனை ரத்து செய்துவிட்டு, பெண்களுக்கான புதிய பாதுகாப்பு சட்ட மசோதா இயற்ற அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நகராட்சி, மாநகராட்சிக்கு சொந்தமான வாடகை இடங்களுக்கு கால அவகாசம் நீடிக்கப்பட்டது. 2 புதிய தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

புதிய மாவட்டங்களுக்கு 15 புதிய மாவட்ட கல்வி அதிகாரிகள் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. புதிய சட்டப்பேரவை, உயர் நீதிமன்றம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. 'அமராவதி ஐ' திட்டத்துக்கு மறு டெண்டர் வெளியிட தீர்மானிக்கப்பட்டது.

# இம்ரான் கான் விடுதலை கோரி போராட்டம்

## 100+ ஆதரவாளர்கள் கைது



இஸ்லாமாபாத், ஆக.8

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுவிக்கக்கோரி, நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பல்வேறு வழக்குகளில் கடந்த 2023, ஆகஸ்ட் 5-ம் தேதி கைது செய்யப்பட்டார்.

சிறையில் அடைக்கப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அவரை விடுவிக்கக்கோரி, நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்ட அவரது பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவாளர்கள் 100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

பிடிஐ ஆட்சியில் உள்ள கைபர் பக்துன்க்வா மாகாணத் தலைநகர் பெஷாவரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மாநில முதல்வர் சுஹைல் அஃப்ரிதி கூறியதாவது: கைது செய்யப்பட்டுள்ள இம்ரான் கானை விடுவிக்க சட்ட ரீதியான மற்றும் நீதித் துறை வழிகளை முழுமையாகப் பயன்படுத்தி விட்டோம். நீதி கிடைக்காவிட்டால், அமைதியான போராட்டம் நடத்தும் அரசியலமைப்புச் சட்ட உரிமையை பயன்படுத்துவோம். இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும். அவர்களது வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், உறவினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் இம்ரானைச் சந்திக்கும் உரிமையை மீண்டும் வழங்க வேண்டும். இம்ரான் கானை விடுவிக்காவிட்டால் செப்.27-ம் தேதி நாடு முழுவதும் இருந்து ஆதரவாளர்கள் இஸ்லாமாபாத் நோக்கி பேரணியாக வருவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார். பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி தலைவரும், முன்னாள் பிரதமருமான இம்ரான்கான்(73) தோஷாகானா (தேசிய கருவூலம்) வழக்கில் கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள அடியாலாவின் தனிமை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் சிறையில் அடைக்கப்பட்டு ஆகஸ்ட் 5ம் தேதியுடன்(நேற்று முன்தினம்) மூன்றாண்டுகள் நிறைவடைந்ததால் இம்ரான் கானை விடுதலை செய்ய வலியுறுத்தி அவரது கட்சியினர் பேரணி மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தி கைது செய்தனர். லாகூரின் மால் சாலையில் போராட்டம் நடத்திய பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் 5 பேர் உள்பட 25 பேர் கைது செய்யப்பட்டனர். கராச்சியின் சத்தார் டவுன் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட இம்ரான் கான் கட்சியினரை கலைக்க காவல்துறையினர் கண்ணீர் புகை குண்டுகளை பிரேயோகித்து கலைத்ததுடன், 10 க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். மேலும், பானோ அகிலில் 6 தொண்டர்களும், கந்த்கோட்டில் 15 தொண்டர்கள் உள்பட 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

# ஹார்முஸ் ஜலசந்தி ஒப்பந்தம் இறுதிக்கட்டம்

## அதிபர் டிரம்பை தொடர்ந்து ஈரானும் அறிவிப்பு



கெய்ரோ, ஆக.8

ஹார்முஸ் ஜலசந்தி தொடர்பான ஒப்பந்தத்தை உருவாக்கும் பணியின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது. ஈரான் அரசை கவிழ்ப்பது மற்றும் அதன் அணுசக்தி திட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவது உள்ளிட்ட பல்வேறு இலக்குகளை முன்வைத்து இஸ்ரேலுடன் இணைந்து அமெரிக்கா கடந்த பிப்ரவரி 28ம் தேதி போரை தொடங்கியது. ஆனால் அந்த நோக்கங்கள் எதுவும் நிறைவேறவில்லை. இந்நிலையில் ஹார்முஸ் ஜலசந்தி தொடர்பான ஒப்பந்தம் உருவாக்கும் பணியின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக ஈரானின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாய் தெரிவித்துள்ளார்.

ஈரானின் உயரிய தலைவர் அயதுல்லா மொஜ்தபா கமேனியின் இறுதி ஒப்புதலுக்காக காத்திருப்பதாகவும் இரண்டு பிராந்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். போரின் ஆரம்ப கட்ட தாக்குதல்களில் கமேனி காயமடைந்து இருக்கலாம் என்றும் அதன் பின் அவர் பொது வெளியில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாகவே இந்த வாரமே ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வெளியாகலாம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் கூறியுள்ளார். இந்த ஒப்பந்தம் நிறைவேறினால் மிக முக்கியமான ஹோர்முஸ் ஜலசந்தி திறக்கப்படுவதோடு உலகப் பொருளாதாரத்தின் மீதான அழுத்தம் குறையவும், போர் முடிவுக்கு வரவும் வாய்ப்புள்ளது.

# ஆகஸ்ட் 20-ல் அதிபர் தேர்தல்

## வங்கதேச தேர்தல் ஆணையம் அறிவிப்பு



டாக்கா, ஆக.8

கடந்த 2024 ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து, பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் அரசு கவிழ்ந்தது. இதையடுத்து ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

அப்போதைய அரசியல் மாற்றங்களுக்குப் பிறகும், ஹசீனா ஆதரவாளரும் 1971 விடுதலைப் போராட்ட வீரருமான முகமது ஷஹாபுதீன் (76) மட்டுமே அரசியல் சாசனப் பதவியான அதிபர் பொறுப்பில் நீடித்து வந்தார்.

பிரதமர் தாரிக் ரஹ்மான் தலைமையிலான தற்போதைய புதிய அரசுடன் ஏற்பட்ட இணக்கமற்ற அரசியல் சூழல் மற்றும் உடல் நலக் குறைவு காரணமாக முகமது ஷஹாபுதீன் தனது பதவியை 2 வாரங்களுக்கு முன்பு ராஜினாமா செய்தார். இந்நிலையில், வங்கதேசத்தில் ஆகஸ்ட் 20-ம் தேதி அதிபர் தேர்தல் நடைபெறும் என அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது. வேட்புமனுத் தாக்கல் ஆகஸ்ட் 13, வேட்புமனு பரிசீலனை ஆகஸ்ட் 16, மனுக்களைத் திரும்பப்பெற கடைசி நாள் ஆகஸ்ட் 18 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் உச்சதலைவர் காமேனியுடன் மோதல் இல்லை

## அதிபர் மசூத் பெசெஷ்கியன் விளக்கம்





டெஹ்ரான், ஆக.8

ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா காமேனியுடன் மோதல் இல்லை என்று அந்த நாட்டு அதிபர் மசூத் பெசெஷ்கியன் தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவம் இணைந்து நடத்திய வான்வழி தாக்குதலில் ஈரானின் உச்சதலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவரது மகன் மொஜ்தபா காமேனி புதிய உச்சதலைவராக பதவியேற்றார்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி தாக்குதலில் மொஜ்தபாவும் படுகாயம் அடைந்தார். ஈரான் அதிபராக மசூத் பெசெஷ்கியன் பதவி வகித்தாலும் மதத் தலைவர் மொஜ்தபா காமேனியே ஆட்சி நிர்வாகத்தை கவனித்து வருகிறார்.

இதனிடையே பலகட்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு அமெரிக்கா, ஈரான் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் ஈரான் ராணுவம் தன்னிச்சையாக செயல்பட்டு சரக்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதால் அமெரிக்காவுடன் மீண்டும் மோதல் உருவானது.

இந்த விவகாரத்தில் அதிபர் பெசெஷ்கியனுக்கும் உச்சதலைவர் மொஜ்தபா காமேனிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகக் கூறப்படுகிறது. சில நாட்களுக்கு முன்பு ஈரான் ராணுவம், அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் பரவின. இந்த சூழலில் பெசெஷ்கியன் தொலைக்காட்சியில் நேற்று பேசியதாவது: சிரியாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது போன்று ஈரானிலும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எதிரிகள் (அமெரிக்கா, இஸ்ரேல்) திட்டமிட்டனர்.

48 மணி நேரத்தில் ஈரானை வீழ்த்தி விடலாம் என்று அவர்கள் கருதினர். ஆனால் எதிரிகளின் சதிகளை, தாக்குதல்களை ஈரான் வெற்றிகரமாக முறியடித்தது. உச்சதலைவர் மொஜ்தபா காமேனியின் தலைமையில் கீழ் ஒட்டுமொத்த மக்களும் ஓரணியில் திரண்டு நிற்கின்றனர். காமேனியின் வழிகாட்டுதல்களால் எதிரிகளின் தாக்குதல்களை ஈரான் மக்கள் துணிவுடன் எதிர் கொண்டு வருகின்றனர்.

தற்போதைய சூழலில் அவரை நேரடியாக தொடர்பு கொள்வது கடினம். எனினும் அவர் எழுத்துப்பூர்வமாக அனைவருடனும் தொடர்பில் இருக்கிறார்.

எனக்கும் உச்சதலைவர் மொஜ்தபா காமேனிக்கும் இடையே எவ்வித மோதலும் இல்லை. தற்போதைய சூழலை பயன்படுத்தி சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவின் மேலும் சில எண்ணெய் நிலையங்கள் மீது உக்ரைன் தாக்குதல்



கீவ், ஆக.8

ரஷ்யாவின் மேலும் சில எண்ணெய் நிலையங்கள் மீது உக்ரைன் கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளது. ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றது.

இந்நிலையில் ரஷ்யாவின் ஏவுகணைகள் மற்றும் டிரோன்களை தடுத்து அழிக்கும் வான்பாதுகாப்பு அமைப்புக்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்துகொண்டே வருகின்றது. இந்நிலையில் ரஷ்யாவின் போர்க்கால பொருளாதாரத்தை சீர்குலைக்கவும், சிக்கலை ஏற்படுத்தும் வகையிலும் உக்ரைன் தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.

இதன் எதிரொலியாக ரஷ்யாவின் உட்பகுதிகளில் உள்ள மேலும் சில எண்ணெய் நிலையங்கள் மீது உக்ரைன் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதல்கள் ரஷ்ய மக்களிடையே கலக்கத்தையும், எரிபொருள் பற்றாக்குறையையும் ஏற்படுத்தி உள்ளன. கிழக்கு உக்ரைனில் இருந்து சுமார் 1300கி.மீ. தொலைவில் இருக்கும் பாஷ்கார்டோஸ்தானில் உள்ள ஒரு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சுமார் 700கி.மீ. தொலைவில் உள்ள யாரோஸ்லாவ் பிராந்தியததில் உள்ள மற்றொரு சுத்திகரிப்பு நிலையத்தையும் உக்ரைன் படைகள் தாக்கியதாக அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# நிலவின் மேற்பரப்பில் மோதிய 'ஸ்பேஸ் எக்ஸ்' ராக்கெட்

## பாதிப்பு என்ன?





புளோரிடா, ஆக.8

நிலவின் மேற்பரப்பில் சுமார் 4 டன் எடை கொண்ட 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் ராக்கெட் பாகம் மோதியதாக தகவல் வெளியாகி உள்ளது.

விண்வெளி சார்ந்த ஆராய்ச்சி பணிகளில் பல்வேறு நாடுகள் மும்முராக ஈடுபட்டு வருகின்றன. சமீப காலமாக இந்த துறையில் சர்வதேச தனியார் நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. அதற்கு விண்வெளி சுற்றுலா முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இருப்பினும் அதையும் தாண்டி அமெரிக்காவின் நாசா, இந்தியாவின் இஸ்ரோ போன்ற விண்வெளி ஆய்வு மையங்களுக்கு எலான் மஸ்க்கின் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் விண்வெளி ஆய்வு பணிகளில் உதவி வருகிறது.

'மானுடர்களுக்கு நிலவில் பேஸ் (மூன் பேஸ்) இருக்க வேண்டும், செவ்வாய் கிரகத்தில் நகரங்கள் இருக்க வேண்டும், மனித வாழ்க்கை நட்சத்திரங்களுக்கு மத்தியில் இருக்க வேண்டும்' என விண்வெளி சார்ந்த எலான் மஸ்க் கொண்டுள்ள கனவு மிகப்பெரியது. அதற்கு சான்றாக பல்வேறு பணிகளை விண்வெளியில் வெற்றிகரமாக ஸ்பேஸ் எக்ஸ் நிகழ்த்தியதும் உண்டு. இருப்பினும் அதன் பாதிப்புகள் எத்தகையும் என்பது குறித்து அறிய முறையான ஆய்வுகள் மற்றும் துல்லியமான படங்கள் அவசியம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய சூழலில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் 'ஃபால்கன் 9' ராக்கெட்டின் மேல் பகுதி இந்திய நேரப்படி புதன்கிழமை அன்று நிலவின் மேற்பரப்பில் மோதியது. அதை எடை 4 டன். இதனால் அந்த இடத்தில் பெரிய அளவில் பள்ளம் ஏற்பட்டிருக்க கூடும் என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அதன் பாதிப்புகள் எத்தகையும் என்பது குறித்து அறிய முறையான ஆய்வுகள் மற்றும் துல்லியமான படங்கள் அவசியம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த ராக்கெட்டின் பாகங்களை கண்டறிய நிலவில் அமெரிக்காவின் நாசா பணியை தொடங்கி உள்ளதாக தகவல். நிலவினை சுற்றி வரும் தென் கொரியாவின் விண்கலனும் இந்த பணியில் இறங்கியுள்ளது. இருப்பினும் இது குறித்த தகவல் கிடைக்க சில நாட்கள் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமிக்கு ஆபத்தா?

விண்வெளி சார்ந்த ஆய்வு பணிகள் அதிகளவில் நடைபெற்று வருகின்ற காரணத்தால் விண்வெளி குப்பை (குணீச்ஞிஞு ஈஞுஞுணூடிண்) குறித்த கவலை விண்வெளி ஆர்வலர்கள் மத்தியில் அதிகம் காணப்படுகிறது.

இந்நிலையில், ஸ்பேஸ் எக்ஸின் ஃபால்கன் 9 ராக்கெட் பாகம் நிலவினை மோதி உள்ளது. இதனால் பூமிக்கு ஆபத்து ஏதும் இல்லை என நாசா செய்தித் தொடர்பாளர் ஜிமி ரஸல் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவில் மோதிய ஃபால்கன் 9 ராக்கெட் கடந்த 2025-ல் விண்ணில் செலுத்தப்பட்டது. அதன் பூஸ்டர் பூமிக்கு திரும்பிய நிலையில், அதன் மேல் பகுதி மட்டும் விண்ணில் இருந்துள்ளது.

### அமெரிக்காவில் பரபரப்பு

# டிரம்பின் ஹெலிகாப்டர் அருகே பறந்த பயணிகள் விமானம்

வாஷிங்டன், ஆக.8

அதிபர் டிரம்ப் பயணித்த ஹெலிகாப்டருக்கு அருகில் பயணிகள் விமானம் பறந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிபர் டிரம்ப், கடற்படைக்கு சொந்தமான 'மெரைன் ஒன்' ஹெலிகாப்டரில் மேரிலேண்ட்டில் உள்ள ஜாயிண்ட் பேஸ் ஆண்ட்ரூஸ் ராணுவ தளத்திற்கு சென்றுக் கொண்டிருந்தார்.

வாஷிங்டனில் உள்ள ரொனால்ட் ரீகன் விமான நிலையத்தை அணுகிய நிலையில் விமான நிலையத்தில் இருந்து பயணிகள் விமானம் ஒன்று புறப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அப்போது ஹெலிகாப்டருக்கும் வானில் பறந்து கொண்டிருந்த விமானத்திற்கும் இடையேயான பாதுகாப்பு இடைவெளி குறுகியது.

டிரம்ப பயணித்த ஹெலிகாப்டர் விமானத்திற்கு மிக அருகே வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து பெடரல் விமானப் போக்குவரத்து ஆணையம் விசாரணையை தொடங்கியுள்ளது. விமானப் பாதுகாப்பு நடைமுறைகள் சரியாக பின்பற்றப்பட்டதா, கட்டுப்பாட்டு அறையில் தகவல் பரிமாற்றத்தில் ஏதேனும் தவறு ஏற்பட்டதா என்பது குறித்து விரிவான விசாரணை நடைபெற்று வருகிறது.

# வடகொரியா புதிய அணு ஆயுத ஏவுகணை சோதனை

சியோல், ஆக.8

வடகொரியா கடலை நோக்கி குறுகிய தூரம் பாயும் அணுஆயுத ஏவுகணை சோதனை நடத்தியதாக தென்கொரியா தெரிவித்துள்ளது. வடகொரியா தென்கொரியா நாடுகளிடையேயான நீண்டநாள் மோதல் காரணமாக கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நீடித்து வருகிறது. தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளுக்கு மிரட்டல் விடுக்கும் விதமாக குறுகிய ஏவுகணை சோதனை, கண்டம் விட்டு கண்டம் தாவும் நீண்டதூர ஏவுகணை சோதனை, நீருக்கடியில் கதிரியக்க சுனாமிகளை உருவாக்கி அணு ஆயுத இலக்குகளை அழிக்கும் புதிய டிரோன் சோதனை உள்ளிட்டவைகளை செய்து வருகிறது.

அந்த வகையில் வடகொரியா பாலிஸ்டிக் ஏவுகணையை ஏவியதாக தென்கொரியா தெரிவித்துள்ளது. இதுகுறித்து தென்கொரிய ராணுவம் கூறுகையில், "வடகொரியாவின் கிழக்கு கடற்கரை பகுதியான வொன்சான் பகுதியில் இருந்து குறைந்த தூரம் பாயும பாலிஸ்டிக் ஏவுகணை ஒன்றை ஏவியதை தென்கொரிய கூட்டு படை தலைமை உறுதி செய்துள்ளது" என தெரிவித்துள்ளது.

# சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 2,160 உயர்ந்து ரூ.1,10,000க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.270 உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,370 க்கு விற்பனையாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ 2,160 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,10,000 க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.10 உயர்ந்து ரூ.250 க்கு விற்பனை செய்யப்படுகிண்றண்து.

# பெட்ரோல் விலை ரூ.107.77, டீசல் விலை ரூ.99.55 க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.107.77 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.99.55 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரி வாயுவின் விலை லிட்டருக்கு ரூ.95.00ண்ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

# நன்மை தரும் ப்ளாக் டீ



கேமல்லியா சினசிஸ் என்று அழைக்கப்படும் இலைகளிலிருந்து ப்ளாக் டீ தயாரிக்கப்படுகின்றது. ப்ளாக் டீ அருந்துவது நம் உடலுக்கு மிக மிக நல்லது என்றே கூறப்படுகின்றது. இதனால் பல நோய்களில் இருந்து இலகுவாக வெளிவரலாம் என சொல்லப்படுகின்றது. அவ்வாறு கூறப்படும் ப்ளாக் டீயினை தினமும் குடித்தால் கிடைக்கும் நன்மைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

★ ப்ளாக் டீ அருந்துவதால் கொழுப்புப் பொருட்களை இதயத்தில் அண்ட விடாமல் தடுப்பதுடன், பல இதய நோய்களுக்கு தீர்வாகின்றது.

★ இதில் உள்ள TF-2 என்ற பொருள் புற்றுநோய் செல்களை அடித்து துவம்சம் செய்வதோடு மட்டுமில்லாமல், பிற சாதாரண செல்கள் தாக்கப்படாமல் இருக்கவும் உதவி செய்கின்றது.

★இதில் உள்ள டானின் மற்றும் பாலிஃபீனால்கள் பற்சிதைவுக்குக் காரணமான பாக்டீரியாக்களை அழிக்கிறது.

★ ப்ளாக் டீயை குடிப்பதால் வாய் துர்நாற்றமும் நீங்கி விடும். வாய் ஆரோக்கியத்திற்குத் தேவையான ஃபுளோரைடுகளை 2 கப் ப்ளாக் டீயில் நாம் பெற்று விடலாம்.

★ ஒரு நாளுக்கு 4 கப் என்ற விகிதத்தில் ஒரு மாதம் தொடர்ந்து ப்ளாக் டீயை குடித்து வந்தால், நரம்பு மண்டலங்கள் வலுவாகிவிடும்.

★ ஞாபக சக்தி அதிகரிக்கும், பார்க்கின்சன் வியாதி கூட சரியாகும். ப்ளாக் டீயில் உள்ள எல்-தியான் என்ற அமினோ அமிலம், கை நரம்புகளை வலுவாக்கிவிடும்.

★ ப்ளாக் டீயில் உள்ள டானின் செரிமானத்திற்கு உதவி செய்கின்றது. மேலும் சிறுகுடல் எரிச்சலைக் குறைக்க உதவுகின்றது.

★ எலும்புகளையும், எலும்புத் திசுக்களை வலுவாக்கவும் ப்ளாக் டீயில் உள்ள பைட்டோகெமிக்கல்கள் பயன்படுகின்றது.

★ ப்ளாக் டீயில் உள்ள காப்ஃபைன் நம்மை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்பதுடன் மூளையின் செயல்பாடுகளும் அதிகரிக்கும்.

★ சுவாச உறுப்புகள், இதயம் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவற்றின் தூண்டல் வளர்ச்சியிலும் ப்ளாக் டீயில் உள்ள த்யோப்பைலின் உதவி செய்யும்.

★ இதில் கொழுப்புச் சத்து குறைவாக இருப்பதால், அதை குடிக்கும் போது உடல் எடை தானாகவே குறையத் தொடங்கும். ப்ளாக் டீயை குடிப்பதால் நம் உடலில் உள்ள ட்ரைக்ளிசரைடு

களின் அளவு குறைந்து, தேவையில்லாத கொழுப்புச் சத்துக்கள் நீங்கும்.

★ உடல் உறுப்புக்களின் செயல்பாடுகளும் அதிகரிக்க உதவும். ப்ளாக் டீ குடிப்பதால் ரத்த நாளங்கள் வலுப்பெறும். உடல் திறன் அதிகரிக்கும். ஒவ்வாமை பிரச்னைகள் குறையும். சர்க்கரை வியாதியும் குணமாகும்.

# சோயா கட்லெட்



தேவையான பொருட்கள்:

மீல் மேக்கர் - 1 கப் (50ஞ்)
வேக வைத்த உருளைக்கிழங்கு - 2
பெரிய வெங்காயம் - 1
துருவிய கேரட் - 1
இஞ்சி பூண்டு விழுது - 1 ஸ்பூன்
மைதா மாவு - 2 ஸ்பூன்
வத்தல்பொடி - 1 ஸ்பூன்
மல்லித்தூள் - 1/2 ஸ்பூன்
கரம் மசாலா - 1/4 ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1/4 ஸ்பூன்
மல்லி தழை - சிறிதளவு
பிரெட் கிரம், எண்ணெய், உப்பு - தேவையான அளவு

செய்முறை:

ஒரு பாத்திரத்தில் இரண்டு கப் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கவும். பின் அதில் மீள் மேக்கர் சேர்த்து சுமார் 10 நிமிடங்கள் வரை அப்படியே வைக்க வேண்டும். பிறகு அதிலிருந்து

தண்ணீரை நன்கு பிழிந்து, மிக்ஸி ஜாரில் போட்டு கொரகொரவென அரைத்து எடுத்துக் கொள்ளவும்.இப்போது ஒரு கச்ணல் சிறிதளவு எண்ணெய் ஊற்றவும் எண்ணெய் சூடானதும், அதில் பொடியாக நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து நன்கு வதக்க வேண்டும். வெங்காயம் வதங்கிய பிறகு, இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து வதக்கவும். அவற்றின் பச்சை வாசனை போன பின் வத்தல்பொடி, மல்லித்தூள், மஞ்சள் தூள் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்துக் கொள்ளவும்.பின்னர் துருவிய கேரட்டை சேர்க்கவும்.கேரட் வெந்த பின், அரைத்து வைத்துள்ள மீல்மேக்கரை சேர்க்க வேண்டும். அதன் பிறகு, வேக வைத்து எடுத்துள்ள உருளை கிழங்குகளை நன்றாக மசித்து அதனுடன் சேர்த்து நன்றாக கிளற வேண்டும். பின் அதில்சிறிது மல்லி தழை சேர்த்து அடுப்பை அணைத்து விடவும்.

இப்போது தயாராக இருக்கும் இந்த மசாலாவை சின்ன சின்ன உருண்டைகளாக உருட்டி தட்டிக் கொள்ளவும். பிறகு ஒரு கிண்ணத்தில், கொஞ்சம் மைதா மாவு எடுத்து அதை தண்ணீர் சேர்த்து கரைத்து வைத்துக் கொள்ளவும். இப்போது ரெடியாக உள்ள கட்லெட்டுகளை மைதா மாவில் டிப் செய்து பின் பிரெட் கிரம்சில் நன்றாக பிரட்டி எடுக்க வேண்டும்.பிறகு கடாயில் எண்ணெய் ஊற்றி, எண்ணெய் சூடானதும் மிதமான தீயில் வைத்து கட்லெட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக போட்டு இரண்டு பக்கமும் பொன்னிறமாக மாறும் வரை பொரித்து எடுக்க வேண்டும். அவ்வளவு தான் இப்போது சுவையான, சுட சுட சோயா கட்லட் ரெடி!! இந்த கட்லட்டை நீங்கள் டொமேட்டோ கெட்சப் மற்றும் புதினா சட்னியுடன் சாப்பிட்டால் அருமையாக இருக்கும்.

# பயாப்சி எடுப்பதால் புற்று நோய் தீவிரமடையுமா?



சாலையில் நன்றாக நடந்து சென்று கொண்டிருக்கும் ஒருவர் திடீரென கீழே விழுந்து கை கால்கள் வெட்டி வெட்டி இழுத்து தன் சுய நினைவின்றி கிடப்பதை சில நேரங்களில் பார்த்திருப்போம். இதனை காக்காய் வலிப்பு நோய் என்று கூறப்படுகிறது. இப்படி திடீரென பாதிக்கக்கூடிய இந்த நோய் குறித்த விழிப்புணர்வு போதியளவில் இல்லை.

இதன்காரணமாக ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் இரண்டாவது திங்கட்கிழமை அன்று சர்வதேச கை- கால் வலிப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த வலிப்பு நோய் எதனால் வருகிறது, இதற்கு தீர்வு என்ன என்பதைப் பார்ப்போம்.

வலிப்பு நோய் என்றால் என்ன? எதனால் ஏற்படுகிறது?

வலிப்பு என்பது எபிலெப்சி என்று ஆங்கிலத்திலும், காக்காய் வலிப்பு என்று தமிழிலும் கூறப்படுகிறது. இது ஒரு நரம்பு மண்டல நோய். அதாவது, மூளை நரம்புகளில் இருந்து புறப்படும் மின்சாரமானது சரியாக வேலை செய்யாதபோது ஏற்படும் பாதிப்பே வலிப்பு நோய். இதனால், சிலருக்கு கை - கால் செயல்திறன் குறைபாடு, சிலருக்கு மரத்துப் போதல், ஒரு சிலருக்கு சுய நினைவு இல்லாமல் இருப்பது போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

நரம்பு மண்டலம் என்பது நியூரான் எனப்படும். சிறிய நரம்பு செல்களால் பின்னப்பட்ட ஒரு வலை போன்றது. மூளை, தண்டுவடம், நரம்புகள் எல்லாம் அடங்கியதுதான் இந்த நரம்பு மண்டலம். இதன் முக்கியமான பணி, தசை அசைவுகள், தொடு உணர்ச்சிகள், பல்வேறு உறுப்புகளின் பணிகளைக் கட்டுப்படுத்துதல் போன்றவை ஆகும். நியூரான்களின் மின் அதிர்வுகள் சில காரணிகளால் கட்டுப்படுத்தப்பட்டு, சமநிலையில் இயங்குகின்றன. ஆனால், வலிப்பின் போது, இந்தச்சமநிலை பாதிக்கப்பட்டு, மின் அதிர்வுகள் அளவுக்கு அதிகமாக உருவாக, அருகருகே உள்ள நரம்புகளுக்குப் பரவுவதால், மூளைக்குள் ஒரு மின்புயல் உருவாகிறது. அதுவே வலிப்பு வரக் காரணமாகிறது.

வலிப்பு நோய்க்கான பரிசோதனைகள் என்னென்ன?

பொதுவாக இந்த வலிப்பு நோயாளிகளின் வலிப்பின் வகையறிதலே சவாலானது. வலிப்பு நேரும்போது நோயாளி தன் சுய நினைவை இழந்துவிடுவதால் அவருக்கு என்ன செய்தது என்பது அவருக்கே தெரியாது. இதனால் அவரால் முழு சம்பவத்தையும் விவரிக்க இயலாது. எனவே, அவருக்கு என்ன வகை வலிப்பு என்பதை அறிவதில் சிரமம் உண்டு. மேலும், ஒருவருக்கு வலிப்பு ஏற்படும்போது அதனை நேரில் கண்டவர்களோ, அருகில் இருப்பவர்களோதான் அவருக்கு என்ன நேர்ந்தது என்று விவரிக்க முடியும்.

அவர்கள் கூறுவதை வைத்துதான் வந்தது வலிப்புதானா,, எந்த வகை வலிப்பு.. என்ன காரணங்களால் ஏற்பட்டது என்று கண்டறிய வேண்டும். அதைக் கொண்டு பரிசோதனைகள் தொடங்க வேண்டும். இதற்கு ரத்த பரிசோதனைகள், எக்ஸ்ரே, ஸ்கேன், ஈசிஜி, எக்கோகார்டியோகிராம் போன்ற பரிசோதனைகள் வலிப்புக்கான காரணங்களை கண்டறிய உதவுகிறது. ஒரு வேளை வலிப்புக்கு தொற்றுநோய், மூளைக்காய்ச்சல் காரணமா என்பதை கண்டறிய முதுகில் தண்டுவடத்தைச் சுற்றியுள்ள நீரை எடுத்து (LUMBAR PUNCTURE) போன்ற பரிசோதனைகளும் செய்யப்படும்.

மேலும், வலிப்பு நோயறிதலில் மிக முக்கியமான, எளிமையான, மலிவான, பயம் இல்லாத ஒரு பரிசோதனை DDâ (Electro ENCEPHALOGR-AM) ஆகும். இதன் மூலம், மூளையின் மின் அதிர்வுகளைப் பதிவு செய்து, வலிப்பு நோய் பற்றி அறிய முடியும். நோயாளி அமர்ந்திருக்கும் போதும், தினசரி வேலைகளைச் செய்யும் போதும் அம்புலேடரி போர்டபிள் மெஷின் மூலமாகவும் ஈஈஜியை பதிவு செய்ய முடியும்.வீடியோ ஈஈஜி டெலிமெட்ரி மூலம் ஒரு நாள் முழுதும் நோயாளியையும், மூளை மின்னதிர்வுகளையும் பதிவு செய்து, வலிப்பு மற்றும் வலிப்பு போன்றே வரும் மற்ற நோய்களையும் பிரித்தறிய முடியும். வலிப்பு நோய்களையும் அதன் காரணங்களையும், மன உளைச்சலால் வரக்கூடிய பொய் வலிப்புகளையும் (PSEUDOSEIZURES), பிறந்த குழந்தைக்கு வரும் வலிப்பு (Neonatal) வலிப்புகளையும் கண்டறிய ஈஈஜி முக்கியமானது.

இது தவிர, எம்.ஆர்.ஐ. இவ்வகை ஸ்கேன் மிகவும் சக்தி வாய்ந்த காந்தப் புலத்தைப் (Magnetic Field) பயன்படுத்தி மூளை மற்றும் வேறு திசுக்களின் அதிர்வலைகளை கம்ப்யூட்டர் மூலம் முப்பரிமான பிம்பங்களாகப் பதிவு செய்ய முடியும். வலிப்பு நோயைப் பொருத்தவரை எம்.ஆர்.ஐ, சிடி ஸ்கேன்களை விட, அதிக விபரங்களை அளிக்க வல்லது அதிலும் சிறு குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானது பெட்ஸ்கேன், ஸ்பெக்ட் ஸ்கேன் போன்றவை. மூளையின் எந்தப் பகுதியிலிருந்து வலிப்பு உருவாகிறதோ, அந்தப் பகுதியின் ரத்த ஓட்டத்தை (அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உள்ளதை) என்பதை தெளிவாக நமக்கு தெரிவிக்கின்றது.

வலிப்புநோய்க்கான தீர்வு..

வலிப்புகளைக் கட்டுக்குள் கொண்டு வர, மருந்துகளை அவசியம் 2 முதல் 5 ஆண்டுகள் வரை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். சில கட்டுக்கடங்கா வலிப்புகளுக்கு, வாழ்நாள் முழுவதும் கூட மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இது மிகவும் குறைந்த சதவிகிதம்தான்.

ஒருவருக்கு வலிப்பு வரும்போது செய்ய வேண்டியவை..

ஒருவருக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டுவிட்டால், கூச்சலிடாமல் அமைதியாக அவரை கையாள வேண்டும். முதலில் அவரை படுக்க வைக்க வேண்டும். பின்னர் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தால், அதை கழற்றிவிட வேண்டும். பின்னர், உடைகளை சற்று தளர்த்தி விட வேண்டும். ஒருகளித்து பக்கவாட்டில் படுக்க வைக்க வேண்டும். இப்படி செய்யும்போது அவரது வாயில் இருந்து வெளியேறும் எச்சில், நுரை போன்றவை வெளியே வர சுலபமாகும். நோயாளி முட்டி மோதி அடிபடுவதை தவிர்க்க அருகில் உள்ள பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். சிறிய தலையணை அல்லது துணி முடிப்புகளை தலைக்கு அடியில் வைக்கலாம்.அடிபட்டிருந்தாலோ, ஐந்து நிமிடங்களுக்கு மேல் வலிப்பு நீடித்தாலோ அல்லது நிற்காமல் திரும்ப திரும்ப வந்து கொண்டிருந்தாலோ, வலிப்பு நின்ற பிறகும் சுவாசிப்பதற்கு சிரமப்பட்டாலோ உடனடியாக மருத்துவர்களையோ, ஆம்புலன்ஸையோ உதவிக்கு அழைக்க வேண்டும்.

செய்ய கூடாதவை

நோயாளியைச் சுற்றி கூட்டமாக நிற்கக்கூடாது.ஏனென்றால் நோயாளிக்கு காற்றோட்டமான சூழல் மிகவும் அவசியம். வாயில், பற்களுக்கிடையில், எந்த ஒரு பொருளையும் (ஸ்பூன், கட்டை, கை) வைக்கக் கூடாது. இரும்பு கம்பிகள், சாவிக்கொத்து போன்ற கூர்மையான பொருளை நிச்சயமாக கொடுக்கக்கூடாது. வெட்டி இழுக்கும்போது இது போன்ற ஆயுதங்கள் நோயாளியின் கண்களையோ, வேறு பகுதியையோ குத்தி ஆபத்தை விளைவிக்கும் அபாயம் உண்டு.முக்கியமாக இரும்பு போன்ற உலோகங்கள் வலிப்புகளைக் கட்டுப்படுத்தும் என்பது மிகவும் தவறானது.வெட்டி இழுக்கும் கை, கால்களை அழுத்திப் பிடித்து வலிப்பை நிறுத்த முயற்சிக்கக் கூடாது.

முழு சுய நினைவு வரும் வரை, நோயாளிக்கு எதுவும் குடிக்கவோ, சாப்பிடவோ கொடுக்கக் கூடாது. மூளை நரம்புகளின் மாறிய அதிர்வுகள் அல்லது மாற்றி செலுத்தப்படும் மின் அதிர்வுகளே வலிப்புக்கான காரணம் என்பது ஆராய்ச்சிப் பூர்வமாக உணர்த்தப்பட்டுள்ள உண்மை ஆகும். மற்றபடி வலிப்புநோய் ஒரு சாபக்கேடோ, வாழ்வின் முடிவோ அல்ல. வலிப்புகளை மீறி வெற்றிகளைக் குவித்த சாதனையாளர்களும் உள்ளனர்.

## இலங்கை பிரதமர் லெவன் அணிக்கு எதிராக பயிற்சி ஆட்டத்தில் இந்தியா மோதல்

கொழும்பு: ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.



முதல் டெஸ்ட் போட்டி வரும் 15 முதல் 19 வரை காலே நகரிலும், 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி 23 முதல் 27 வரை கொழும்பு நகரிலும் நடைபெறுகின்றன.

முன்னதாக இந்திய அணி 3 நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் இலங்கை பிரதமர் லெவன் அணியுடன் மோதுகிறது. இந்த ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு கொழும்பு நகரில் உள்ள நான்டிஸ் கிரிப்ட்ஸ் கிரிக்கெட் கிளப் மைதானத்தில் தொடங்குகிறது.

இந்திய அணி கடந்த இரு தொடர்களிலும் சொந்த மண்ணில் நியூஸிலாந்து, தென் ஆப்பிரிக்க அணிகளுக்கு எதிராக சுழற்பந்துவீச்சில் மோசமாக விளையாடி தோல்விகளை சந்தித்து இருந்தது. இதனால் சுழலுக்கு சாதகமாக இருக்கும் இலங்கை ஆடுகளங்களும் இந்திய அணிக்கு சவாலாக அமையக்கூடும். இதற்கு தயாராகும் விதமாக இந்திய அணி பயிற்சி ஆட்டத்தை பயன்படுத்திக்கொள்ளும்.

இதற்கிடையே இலங்கை புறப்படுவதற்கு முன்னதாக ஷுப்மன் கில், கே.எல்.ராகுல் யஷஸ்வி ஜெய்ஸ்வால் உள்ளிட்ட அணியின் முன்னணி பேட்ஸ்மேன்கள் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளும் பயிற்சிகளைத் தனிப்பட்ட முறையில் தொடங்கியிருந்தனர். இருப்பினும், அது இலங்கை ஆடுகளத்தில் விளையாடும் அனுபவத்துக்கு கைகொடுக்குமா? என்பது சந்தேகமே.

அந்த வகையில் இன்று தொடங்கும் பயிற்சி போட்டியானது உள்ளூர் சூழ்நிலைகளை இந்திய அணி வீரர்கள் தகவமைத்துக்கொள்ள உதவக்கூடும். ஏனெனில், அணியில் இடம் பெற்றுள்ள பல வீரர்கள் முதன்முறையாக இலங்கை மண்ணில் டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளனர்.

இந்திய அணி கடைசியாக 2017-ம் ஆண்டு இலங்கை மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இருந்தது. அந்தத் தொடரில் விளையாடிய கே.எல்.ராகுல், குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் மட்டுமே தற்போதைய அணியிலும் உள்ளனர்.

ஜஸ்பிரீத் பும்ரா காயம் காரணமாக விலகி உள்ளதால் வேகப்பந்து வீச்சு துறையை முகமது சிராஜ் வழிநடத்தக்கூடும். பிரசித் கிருஷ்ணா, குர்னூர் பிரார் ஆகியோர் உறுதுணையாக செயல்படக்கூடும். சுழற்பந்து வீச்சில் குல்தீப் யாதவுடன் மானவ் சுதார், சரண்ஷ் ஜெயின் ஆகியோரும் பலம் சேர்க்கக்கூடும்.

இந்நிலையில், கொழும்பு நகரில் இன்று விட்டுவிட்டு மழை பெய்யக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதனால் பயிற்சி போட்டி பாதிக்கப்படக்கூடும். இலங்கை பிரதமர் லெவன் அணி சோனல் தினுஷா தலைமையில் களமிறங்குகிறது.

அவர், இலங்கை அணிக்காக 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார். பிரதமர் லெவன் அணியில் வேகப்பந்து வீச்சாளர்களான விஷ்வா பெர்னாண்டோ, லஹிரு குமரா மற்றும் சுழற்பந்து வீச்சாளர்களான இஷிதா விஜேசுந்தரா, ரமேஷ் மெண்டிஸ் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

## ‘‘எங்களை நோக்கி எழும் கேள்விகளுக்கு ஆக.15-ல் பதிலடி கொடுப்போம்’’ - பயிற்சியாளர் கவுதம் கம்பீர்

கொழும்பு: இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 15-ம் தேதி காலே நகரில் தொடங்குகிறது.



ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் சுழற்சியில் இந்திய அணி கடந்த ஆண்டு டிசம்பரில் சொந்த மண்ணில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-2 என்ற கணக்கில் இழந்த நிலையில் தற்போது இலங்கை அணியை எதிர்கொள்ள உள்ளது.

இலங்கை தொடருக்கான இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளரான மத்திய பிரதேசத்தை சேர்ந்த சரண்ஷ் ஜெயின், ஜம்மு-காஷ்மீரை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான அகிப் நபி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்நிலையில் இந்திய அணி வீரர்கள் நேற்று வலை பயிற்சியில் ஈடுபட்டனர்.

முன்னதாக பிசிசிஐ வெளியிட்டுள்ள வீடியோவில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீர் கூறியதாவது:

எங்கள் கண்முன்னே என்ன இருக்கிறது என்பது எங்களுக்கு தெரியும், நாங்கள் எதற்காக விளையாடுகிறோம் என்பதும் எங்களுக்கு தெரியும். எங்களால் கடின உழைப்பைக் கொடுக்க முடியும், எல்லைகளை தாண்டி செயல்பட முடியும், அணியின் அனைத்துத் தேவைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்யவும் முடியும்.

ஆகஸ்ட் 15-ம் தேதி காலை முதல் டெஸ்ட் போட்டி தொடங்கும்போது, நாங்கள் முதலில் பேட்டிங் செய்தாலும் சரி, அல்லது பந்துவீச்சு செய்தாலும் சரி, எங்களிடம் வீசப்படும் ஒவ்வொரு கேள்விக்கும், ஒவ்வொரு சவாலுக்கும் பதிலளிக்க நாங்கள் முழுமையாகத் தயாராக இருக்கிறோம்.

அணியில் புதிய வீரர்கள் இணைந்திருக்கிறார்கள். முதலாவதாக, சரண்ஷ் ஜெயினுக்கு வாழ்த்துகள். இங்கு வருவதற்கு அவர், கடினமாக உழைத்துள்ளார். எப்போது வாய்ப்பு கிடைத்தாலும் அதை உங்கள் குடும்பத்துக்காகவும், நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் பயன்படுத்துங்கள்.

இரண்டாவதாக, அகிப் நபிக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த சீசன் அவருக்கு அற்புதமாக அமைந்தது, ஜம்மு - காஷ்மீருக்கு ரஞ்சிக் கோப்பையை வென்று கொடுத்துள்ளார். இது மிகப்பெரிய சாதனையாகும். அவருக்கு மீண்டும் ஒருமுறை வாழ்த்துகள். இவ்வாறு கவுதம் கம்பீர் கூறினார்.

## யு-20 தடகள சாம்பியன்ஷிப்: இறுதிப் போட்டியில் இந்திய வீரர்கள்

யூஜின்: அமெரிக்காவின் யூஜின் நகரில் யு-20 தடகள சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான ஈட்டி எறிதல் தகுதி சுற்றில் ‘ஏ’ பிரிவில் இடம் பெற்றிருந்த இந்தியாவின் ஆஷிஷ் யாதவ் 69.87 மீட்டர் தூரம் எறிந்து 2-வது இடம் பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.



மற்றொரு இந்திய வீரரான தரணிதரன் ‘பி’ பிரிவில் 68.07 மீட்டர் தூரம் எறிந்து ஒட்டுமொத்தமாக 12-வது இடம் பிடித்து இறுதி போட்டிக்குள் நுழைந்தார். தரணிதரன் தமிழகத்தைச் சேர்ந்தவர்.

மகளிருக்கான வட்டு எறிதல் தகுதி சுற்றில் ‘ஏ’ பிரிவில் இடம் பெற்றிருந்த இந்தியாவின் அமானத் கம்போஜ் 52.58 மீட்டர் தூரம் எறிந்து ஒட்டுமொத்தமாக 12-வது இடம் பிடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். ஆடவருக்கான 800 மீட்டர் ஓட்டம் தகுதி சுற்றில் இந்தியாவின் மொகலி வெங்கட்ராம் பந்தய தூரத்தை 1:52.81 விநாடிகளில் கடந்து ஹீட் 5-ல் 3-வது இடம் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு இந்திய வீரரான யுவின் ஆனந்த், ஹீட் 1-ல் 7-வது இடமும், ஒட்டுமொத்தமாக 30-வது இடமும் பிடித்து ஏமாற்றம் அளித்தார். தமிழகத்தை சேர்ந்த அவர், பந்தய தூரத்தை 1:52.37 வினாடிகளில் கடந்திருந்தார்.

4றூ400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் பியூஷ் ராஜ், தஹ்ரா கதுன், சையத் சபீர், தியா ஆறுமுகம் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி பந்தய தூரத்தை 3 நிமிடங்கள் 22.85 வினாடிகளில் கடந்து ஒட்டுமொத்தமாக 11-வது இடத்தை பிடித்து போட்டியில் இருந்து வெளியேறியது.

## ஆஸி திண் வங்கதேச டெஸ்ட் தொடர்: இரட்டை சாதனைக்கு ஸ்டார்க் குறி

சிட்னி: வங்கதேச கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 13-ம் தேதி டார்வினில் தொடங்குகிறது.



இந்த டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் முன்னாள் கேப்டனான கபில் தேவின் சாதனையை முறியடிக்க காத்திருக்கிறார் ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க்.

இடதுகை வேகப்பந்து வீச்சாளரான அவர், இதுவரை 105 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 433 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இதன் வாயிலாக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர்களின் பட்டியலில் 12-வது இடத்தில் உள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கேப்டனான கபில் தேவ் டெஸ்ட் போட்டிகளில் 434 விக்கெட்டுகளைக் கைப்பற்றி 11-வது இடத்தில் இருக்கிறார். வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது, மிட்செல் ஸ்டார்க் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினால் கபில் தேவின் அதிக விக்கெட்டுகள் சாதனையை முறியடிப்பார். அதே வேளையில் ஒட்டுமொத்தமாக 7 விக்கெட்களை வீழ்த்தினால் தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் வீரரான டேல் ஸ்டெயினை (439 விக்கெட்கள்) பின்னுக்குத் தள்ளி டாப் 10-ல் இடம் பெறுவார். ஸ்டெயின் தற்போது 10-வது இடத்தில் உள்ளார்.

## ‘தி டைம் ப்ரோபல்லர்‘ திரைப் பார்வை - கால வெளியில் நிறைந்து கிடக்கும் காதல் பயணம்



தொடக்கத்தில் ஒலிக்கும் குரல் சொல்வது போல, (The Time Propeller) என்கிற இந்த அறிவியல் புனைவு குறும்படமும் தற்செயலாகத்தான் எனக்குக் காண கிடைத்தது. மணித்திலாயத்துக்கும் குறைவான நேரத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்குள் உறுத்தல் இல்லாமல் நம்மை அழைத்துச் சென்று, காலவெளியில் நிறைந்து கிடக்கும் காதலையும், அதன் மீது சுமத்தப்பட்ட சாதி அரசியலையும் அறிமுகப்படுத்தி வைக்கிறது இப்படம். இருபதாம் நூற்றாண்டின் முதல் காலாண்டில் (1925) சென்னை, செம்மலையில் தொடங்குகிறது ‘தி டைம் ப்ரோபல்லர்’ குறும்படம். சென்னைக்கு மிக அருகில் என்கிற குடியிருப்புகள் தோன்றாத காலத்தில் வாழும் ஒருவர் தனது திருமண நாளில், விஞ்ஞானி ஒருவர் எழுதிய டைரியின் உதவியுடன் காலவெளிக்குள் பயணப்பட வைக்கும் ஒரு பாறையைத் தேடிக் கண்டடைகிறார். நூறாண்டுக்கு ஒருமுறை மின்காந்த அலைகளை வெளிப்படுத்தி தன் எதிரில் இருக்கும் எதையும் காலங்கள் கடந்து பயணப்பட வைக்கும் ஆற்றல் கொண்டது அந்தப் பாறை. நல்ல நாளும் பொழுதுமாய் காட்டுக்குள் சுற்றித் திரியும் மச்சானை தேடியபடி மச்சினன் வர, அவர்களுக்குள் நடக்கும் வாக்குவாதத்தால், மச்சானின் கையில் இருக்கும் டைரி கைதவறி பாறைக்கு முன் விழுந்து, மின்காந்த அலையால் காலவெளிக்குள் பயணித்து அந்த இடத்துக்கு ஒரு மடிக்கணினி அழைத்து வருகிறது. இருவரும் அதிசயமாய், ஆச்சர்யமாய் அதைப் பார்க்கிறார்கள். ‘நீ மட்டும் என்னைத் தடுத்து இழுக்கலனா நான் என்னவாயிருப்பேன்’ என்ற மச்சினனின் கேள்விக்கு, ‘நீ அங்கே போயிருப்ப, உன் பேரன் இங்கே வந்திருப்பான்’ என்கிறார் மச்சான். நூறு ஆண்டுகளுக்கு பிறகு (2025) பேரன்களின் காலம்... வீட்டுக்குத் தெரியாமல் காதல் மணம் புரிந்த தங்கை, அவள் கணவனை குலத்தெய்வ கோயிலுக்கு அழைத்து வருகிறான் பெண்ணின் அண்ணன். புதுமண தம்பதி சாமி கும்பிடும்போது, தங்கையின் கணவனை குத்தி சாய்த்து விட துடிக்கிறது அண்ணனின் சாதி வெறி. முதல் குத்தை வாங்கிய புது மாப்பிள்ளை, இரண்டாவது குத்தை தடுத்துப் போராட, காட்டுச் சாமியாய் மாறியிருக்கும் அந்த அதிசய பாறை மின்காந்த அலைகளை வெளிப்படுத்தி தங்கை கணவனை கற்காலத்துக்கும், கற்காலத்தில் இருக்கும் அவனது ஆதிமூப்பாட்டனை தற்காலத்துக்கும் மாற்றிவிடுகிறது.

குறும்படத்தின் ரசவாதமே இந்தப் பகுதி தான். உணவு தேடி வேட்டையாடி திரிந்த காலத்திலிருந்த காதல், நாகரிகம் வளர்ந்த காலத்தில் இருந்த காதல் என மாறி... மாறி... காட்டும் திரைக்கதை, வீசும் காற்றில் கலந்து, மூச்சை திணறடிக்கும் நச்சு நெடியாய் காதலில் சாதி கலந்த கதையை பிரச்சாரம் இல்லாம் சொல்லி ஈர்க்கிறது. கண்டுபிடிப்புகளும், நாகரிகமும் புலன்களை இணைத்து, மனங்களை விலக்கி வைத்த யதார்த்தம் கதையுடன் கைகோத்திருக்கிறது. அரைமணி நேரத்துக்குள் காலவெளி பயண அறிவியல் புனைகதை... அதில் கடந்த காலத்துக்கு பயணம் செய்து, இந்தக் காலம் தொலைத்த ஒரு பொக்கிஷத்தை பார்வையாளர்களுக்கு மீட்டுக் கொடுக்கிறது. சென்னைக்கு அருகில் கற்கால மனிதன் வாழ்ந்த எச்சம், கொல்லப்பட்ட காதலர்கள் கடவுளாக்கப்பட்டது என வரலாற்று உண்மைகள் மீது ஊர்ந்து மனிதனின் ஆதி உணர்வை கண்டடைகிறது இந்தக் கால பயணம்.

அதிக இடங்களில் படப்பிடிப்புக்கு வாய்ப்பளிக்காத கதையில், கிடைத்த இடத்தை கற்கால, தற்கால, இடைக்கால காட்டுப் பகுதிகளாய் தனது காட்சி அமைப்பின் மூலம் வித்தியாசப்படுத்தி காட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் யாழினி ரமேசன். செல்வராஜின் கலை இயக்கமும், அமல் ராஜின் ஆடை வடிவமைப்பும் கற்கால மனிதர்களை குறையின்றி காட்டியிருக்கிறது.

இயக்குநரே படத்தொகுப்பும் செய்திருப்பதால் கதையின் ஓட்டத்துக்கு படத்தொகுப்பு உயிரூட்டுகிறது.

அதிக வசனங்கள் இல்லாத கதையில் திரைக்கதையுடன் பயணிக்கும் சங்கர் கணேஷின் இசை, கதாபாத்திரங்களின் உணர்வுகளுக்கு வடிவம் கொடுத்திருக்கிறது. ‘கீச்2’ சினிமாஸ் வெளியீட்டில், அருண் பகத் இயக்கி இருக்கும் ‘தி டைம் ப்ரோபல்லர்’ குறும்படம் யூ டியூபில் காணக் கிடைக்கிறது.

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI DAILY TAMIL PUBLISHED FROM - CHENNAI
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF,** mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**